# வெளிச்சம்

ஐப்பசி – 1993

20/=



விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்

உங்களுக்குத் தேவையான
சகல பலசரக்குப் பொருள்களையும் பெற்றுக்கொள்ள

**சோதி ஸ்ரோர்ஸ்**
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

சகலரும் விரும்பும்
பாதணிகளைத் தெரிவுசெய்ய
எங்கள் காட்சியகம்

**யாழ் றேட் சென்ரர்**
[பாட்டா ஏஜென்சி]
11, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சித்திராலயாவின் புகைப்படங்கள்
அருமையான கலைப் பொக்கிசங்கள்

புதிய தொழில் நுட்பம்
திறமையான படப்பிடிப்பு


வர்ணப் புகைப்படங்களையும், கறுப்பு - வெள்ளை
புகைப்படங்களையும் விரும்பிய அளவுகளில் படமாக்குங்கள்

**சித்திராலயா**
18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

புள்ளினம் சிறகினை விரித்தன, வரம்பின்
புற்களும் தலைகளை நிமிர்த்தின, வாய்க்கால்
தெள்ளிய நீரினில் குதித்தன மீன்கள்
தேவியர் வாயிதழ் சிரித்தன, பூவில்
கள்ளினைக் குடித்தபொன் வண்டுகள் பாடிக்
களித்தன, தமிழனே! இன்னுமா உறக்கம்?
பள்ளிகொள் கின்றனை பகைவனுன் வீட்டுப்
படலையில் வந்துளான் பாயைவிட் டெழுவாய்.

எங்கணும் கதிரொளி எழுந்தது பாராய்
இருளவன் பிடியிருந் தகன்றது வையம்
மங்கலச் சங்கொலி காற்றினில் பரவி
மனதிடை புத்துணர் வேற்றுதல் அறிவாய்
பங்கயம் மலர்ந்தது, பசுமடி நிறைந்து
பாலெலாம் ஊற்றெனப் பாய்ந்தது, வீரம்
பொங்கிடப் புலிப்படை புகுந்தது களத்தில்
போர்முர சதிர்ந்தது பாயைவிட் டெழுவாய்.

கோழிகள் கூவின, முருகனின் கோவில்
கோபுர மணிகளும் அசைந்தன, தமிழில்
வாழிய பாடியோர் புலவனுன் வாசல்
வரையிலும் வந்துளான் கேட்டுநீ எழுவாய்
யாழிருட் டகன்றது வேங்கைகள் சேனை
பகைமுடித் தாடிய படிவரும் சத்தம்
ஆழியின் பேரலை அடிப்பது போன்று
அண்மையில் கேட்குது பாயைவிட் டெழுவாய்.



—மாலிகா—

வெளிச்சம்
ஐப்பசி - 1993
இதழ் - 19

ஸ்ரீலங்கா ஆட்சித்தலைவர் டிங்கிரி பண்டா விஜேதுங்க அவர்கள், இலங்கையின் வடக்கு கிழக்கில் இனப்பிரச்சினை என்று எதுவும் கிடையாது; பயங்கரவாதப் பிரச்சினையே இருக்கிறது; அதையும் விரைவில் இல்லாதழித்து விடுவோம் என்று கூறியதிலிருந்து,

சுதந்திரம் கேட்டுக் கிடைப்பதில்லை.

விடுதலை பேசிப்பெறுவதில்லை.

என்பதை மீண்டுமொருமுறை ஈழத்தமிழினம் உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது.

அடக்கப்படும் ஒரு இனம் தன் இறைமைக்காகவும், உரிமைக்காகவும் போராடுவது பயங்கரவாதமென்றால், இழந்துபோன தன் தாய்மண்ணை மீட்டெடுப்பதற்காக அம்மண்ணுக்கு உரித்துடையவர்கள் போராடுவது பயங்கரவாதமென்றால் நாங்கள் பயங்கரவாதிகளாகவே இருந்துவிட்டுப் போகின்றோம்.

சமதரையான எங்கள் தாய்மண்ணை பள்ளத்தாக்குகள் நிறைந்த பூமியென்று இனிவரும் தலைமுறை பேசக்கூடிய அளவுக்கு, எதிரி குண்டுகளைவீசி குழியாக்கி எம்மண்ணைப் புண்ணாக்குகின்றான்.

எங்கள் நாசித்துவாரங்கள் நச்சுப்புகையையே சுவாசிக்குமளவுக்கு எதிரி வீசி வெடிக்கச் செய்யும் எறிகணைகளாலும், குண்டுகளாலும் கந்தகக்காற்றை எமது பரவெளியில் கலக்க விடுகின்றான்.

தினம் தினம் எங்கள் கடற்பரப்பு எதிரியின் நரபலிக்களமாகி, தமிழனின் குருதி கொப்பளிக்கிறது.

உலகத்துக்குச் சமதையாக வளர்ந்திருக்கவேண்டிய எங்கள் அறிவியல், தொழில் நுட்பம், விஞ்ஞானம், கலை என யாவினதும் வளர்ச்சிக்குரிய பாதைகள் அனைத்தையும் பகைவன் மூடிவிட்டு திறப்பைத்தானே வைத்திருக்கின்றான்.

தென்தமிழீழம் சொல்லவொண்ணாதுயர்சூழ்ந்து கண்களில் நீர்வற்றி கலங்கிக்கிடக்கிறது.

தமிழனென்றால் ஏதோ கால்செருப்பு, கழிவுப்பொருள், தொடவும் கூடாத தொழுநோயாளி என்பதுபோல சிங்களச் சிறுசுகளுக்கு சொல்லிக்கொடுத்து வளர்த்து விடுகின்றான்.

இத்தனையையும் பொறுத்துக் கொண்டு, அவனுக்குக் கைகட்டி சேவகம் செய்தும், சந்தனம்பூசி சாமரம் வீசியும் வெறும் சோற்றுப்பிண்டமாக தின்று

கிடப்பதிலும், எழுந்து நின்று விடுதலைக்காகப் போராடி விழுந்து மடிவது எவ்வளவு பெருமையானது.

தமிழனை நாயென்று நையாண்டி செய்தவர்களை புலியென்று கிலிகொள்ள வைத்தான் எங்கள் தலைவன் பிரபாகரன்.

சூடு சுரணையற்று தூங்கிக்கிடந்த தமிழனை மேலும் தூங்கவைப்பதற்காக தாலாட்டுப்பாடிக் கொண்டிருந்த பழைய தலைவர்களிடமிருந்து எம்மை மீட்டெடுத்து, பூபாளம் பாடக் கற்றுத்தந்தான் எங்கள் தலைவன் பிரபாகரன்.

இப்போது ஈழத்தமிழினம் தன்வாழ்வுக்காகப் போராடத் தொடங்கிவிட்டது.

தமிழனை எவன் தொட்டாலும், தொட்டவன் எவனாக இருந்தாலும், அவன் நிம்மதியாக நீட்டிப்படுக்க முடியாது என்பதை உலகம் புரிந்துகொண்டு விட்டது.

இத்தனைக்குப் பின்பும், இன்னும் புத்திதெளியாத ஸ்ரீலங்கா ஆட்சித்தலைவரும், அவர்களின் படைத்துறைத் தளபதிகளும், நாங்கள் போராடி மீட்டெடுத்த எங்கள் நிலப்பரப்பில் முன்னேறிவந்து 'தமிழனை அழித்துவிடுவோம்' என்று ஆரவாரிக்கின்றார்கள்.

இறுதிவரை போராட புலிகள் உறுதி பூண்டுள்ளோம். உங்கள் பிள்ளைகளின் சத்திய யுத்தத்துக்கு கொஞ்சம் தோள் கொடுங்கள்.

பத்துவருடங்களுக்குப் பின்னர் மீண்டும் குடாநாட்டு வீதிகளில் பவனிவரும் எதிரியின் கனவைக் கலைத்துவிடுவோம். அவன் வரத்துடிக்கும் பாதையில் மட்டுமல்ல, தங்கிநிற்கும் தங்ககத்தையும் நிர்மூலம் ஆக்கிவிடுவோம். இப்போது வேண்டுவதெல்லாம் கலங்காத உறுதியும், போராடும் துணிவும், வெல்வோம் என்ற நம்பிக்கையுமே.

வெல்வோம் என்ற நம்பிக்கையுடன் போராடுபவரை எந்தச் சக்தியாலும் வீழ்த்த முடியாது.

செல்லும் வழியின் தெளிவும், சேனையின் பெருக்கமும், வழிநடத்தும் தலைவன்மீது விசுவாசிப்பும், ஒன்றாக இணைந்து நிற்கும் பிணைப்புமுள்ள ஒரு விடுதலைப்போரை உலகமே திரண்டுவந்து எதிர்த்தாலும் உருக்குலைக்க முடியாது.

இப்போது எமக்கும் அதுவே வேண்டும். குருதிகுடிக்கவந்தகோரப்பற்களைப் பிடுங்கி குப்பையிலே வீசுவோம்.

தாய், பிள்ளை, தந்தை, கணவன், மனைவி, ஆண், பெண் என்ற பேதமின்றி போர்க்கோலம் பூணுவோம்.

புறப்படுங்கள்! போர்க்களங்களே எங்கள் புகலிடங்களாக இருக்கட்டும்.

எங்களின் எழுச்சிக்கும், வெற்றிக்குமான உரமாகத்தான் பல்லாயிரக்கணக்கான மாவீரர் மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

வாருங்கள் போராடுவோம்.

## சமூகத்தின் விடிவே கல்விமான்களின் இலட்சியமாகட்டும்



—தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

மனித சமூகங்களின் வளர்ச்சிக்கும்; உயர்ச்சிக்கும், வளமான வாழ்வுக்கும் ஆதாரமாக அமைவது கல்வி. அந்தக் கல்வியை இளஞ்சமுதாயத்துக்கு ஊட்டுகின்ற உன்னத பணியை ஆசிரியர் சமூகம் மேற்கொண்டு வருகிறது. சமூகத்தின் சிற்பிகளாக சமூக மேம்பாட்டுக்கு உழைத்துவரும் ஆசிரியப் பெருந்தகைகள் பாராட்டுக்குரியவர்கள்.

எமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியைச் சீர்குலைத்து, எமது தேசிய வாழ்வையும் வளத்தையும் சீரழித்து, எமது நிலத்தை ஆக்கிரமித்து, எம்மை இன ரீதியாக அழித்தொழிக்க எமது எதிரியானவன் இன்று பெரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறான். இந்த இக்கட்டான போர்க்காலச் சூழலில் ஆசிரிய சமூகத்தின் பொறுப்பும் பங்கும் முக்கியமானது. சகல நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து எமது தேசத்தின் அறிவுச்சுடரான கல்வியை அணைந்துவிடாது பாதுகாப்பது ஆசிரிய சமூகத்தின் தலையாய பொறுப்பாகும். அத்துடன், எமது சமுதாயத்தின் விடிவை இலட்சியமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உறுதுணையாக நிற்பதும் கல்விமான்களின் கடமையாகும்.

எத்தனையோ இடர்களையும் தடைகளையும் எதிர்கொண்டு இந்தத் தேசியப்பணியில் எமது ஆசிரியர்கள் மிகவும் பொறுப் புணர்வுடனும் தேசியப்பற்றுணர்வுடனும் துணிவுடனும் செய லாற்றி வருவதுகண்டு நான் பெருமைகொள்கிறேன். இந்நிலை யில் எமது சமுதாய மேம்பாட்டின் ஏணிப்படிகளாகத் திகழும் இப்பெருந்தகைகளை ஏற்றிப்போற்றி மதிப்பளிப்பது எமது கட மையாகும்.

உலகெங்கும் ஆசிரியர் சமூகத்தைப் பாராட்டும் நாளாக, அக்டோபர் 6ஆம் நாள் உலக ஆசிரியர்நாளாகக் கொண்டா டப்பட்டு வருகிறது. உலக சமுதாயம் நன்றியுணர்வுடன் கொண் டாடிவரும் இந்நன்னாளில் நாமும் எமது ஆசிரியர் சமூகத்தைப் பாராட்டிக் கௌரவிப்பது சாலச்சிறந்ததாகும்.

தமிழீழத்தின் கல்விநிலையை மேம்படுத்துவதைக் குறிக் கோளாகக்கொண்டு செயற்பட்டுவரும் தமிழீழக் கல்வி மேம்பாட் டுப்பேரவையினர் தமிழீழத்தில் உலகஆசிரியர் நாளைச் சிறப் பாகக்கொண்டாட முன்வந்திருப்பதனை மனமாரப்பாராட்டு கிறேன். தமிழீழ ஆசிரியசமூகம் சிறப்புற்றுவாழ எனது நல் வாழ்த்துக்கள்.

அத்துடன், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆசி ரியர் வாண்மைவிருத்திக்குழு, ஆசிரியர்களின் கற்பித்தல் முறைக்கு ஊக்கங்கொடுத்து உதவுகின்றநோக்கில் ‘விளக்கு’ என்ற பெய ரில் மாத இதழ் ஒன்றை உலகஆசிரியர்நாளில் வெளியிடுவ தையிட்டும் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த ‘விளக்கு’ இதழ் கல்விப்போதனைக்கு வெளிச்சம் காட்டி, தொடர்ந்து சிறப்பாக வெளிவர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*[ 1993ஆம் ஆண்டின் உலகஆசிரியர் தினத்தையொட்டி தமிழீழத்தேசியத்தலைவர்* **திரு. வே. பிரபாகரன் அவர்கள்** *வழங்கிய வாழ்த்துச்செய்தி ]*



புதுவை இரத்தினதுரை
எழுதிய

## எதிர்கொள்ளும் பகை வெல்ல இது நேரம் வருக!

கரற்றினுக்கு எவரெனினும் விலங்கு மாட்டிக்
கைதியென வைத்திருப்ப துண்டோ? இல்லை
சீற்றமுடன் கொந்தளிக்கும் கடலை யாரும்
சிறையினிலே போட்டடைப்ப துண்டோ? இல்லை.
நாற்றிசையும் அரசோச்சி பகைவன் மேனி
நடுநடுங்க வாழ்ந்தவனே; நீயேன் இங்கு
காற்செருப்பாய் கிடக்கின்றாய்? தமிழா! வீட்டுக்
கதவடியில் வந்தபகை துடைப்போம் வாடா!

பச்சைவயல், தோட்டத்துக் கிணறு, வாய்க்கால்
பனங்கூடல், ஒற்றையடிப் பாதை என்று
அச்சமின்றி நாம்திரிந்த இடங்கள் எல்லாம்
அந்தரித்துக் கிடக்கிறது, தாய்மண் தன்னில்
மிச்சமெதும் விட்டானா பகைவன்? இல்லை
மேனியெங்கும் புண்ணாகி உள்ளாள் அன்னை
எச்சிலிலைச் சோறினியும் வேண்டாம்; கையில்
எரிதழலைக் கொண்டெழுந்து களத்தே வாடா!

தாயுனக்குத் தந்ததென்ன பாலா? இல்லைத்
தண்ணீரா? தமிழிச்சி முலையில் உந்தன்
வாயருந்திக் கொண்டதென்ன பாலா? அன்றி
வடித்தகஞ்சித் தண்ணீரா? தமிழா! இன்னும்
பாயிலென்ன படுக்கையடா, எதிரி எங்கள்
படலையிலே வந்திடவும், தெருவின் ஓரம்
நாயெனவே கிடப்பதற்கா பிறந்தாய்? உந்தன்
நரம்பினிலே என்றுனக்கு வீரம் பாயும்?

தின்பதுவும், செமிப்பதுவும் கழிவறைக்குச்
சென்றதனைக் கழிப்பதுவும், இவைகள் தானா
இன்றுனக்கு உள்ளபணி? இல்லை; எங்கள்
இருப்பிடங்கள் இடிந்துவிழ அகதி ஆகிப்
பின்னடைந்து, பின்னடைந்து போகத் தானா
பிறப்பெடுத்தாய்? இல்லையடா, தமிழா! உந்தன்
அன்னைநிலம் அந்நியரின் கையில் சாகும்
அவலநிலை மாற்றிடுவோம், களத்தே வாடா!

வீட்டினிலே பெற்றவர்கள், மூச்சு விட்டு
விம்முகின்ற முதிர்தங்கை, என்று பார்த்துக்
கூட்டினிலே கிடப்பதற்கு இதுவா நேரம்?
கொல்லையிலே வந்துள்ளான் பகைவன், உன்னில்
எட்டிலறி யாததமிழ் வீரம் பாய்ந்து
எரியட்டும், நரம்பெல்லாம் கொதிப்பே றட்டும்
பாட்டனது நிலம்பறிக்க வந்த எங்கள்
பகைவனுக்குப் பாடைசமைத் திடுவோம் வாடா!

நாமெரிந்து போனாலும் நாளை இந்த
நாடெரிந்து போகாமல் காப்போம், பெற்ற
தாயெரிந்து போகாமல், எங்கள் மூச்சாம்
தமிழெரிந்து போகாமல்; நாளை பூக்கும்
பூவெரிந்து போகாமல் காப்போம்; இன்றே
போர்முரசம் ஒலிக்கட்டும், பகைவன் வந்த
தேரெரிந்து போகட்டும்; செந்நீர் பாய்ந்து
திசைசிவந்து கொள்ளட்டும். ஒருகை பார்ப்போம்!

விழிதிறந்து பாருந்தன் தாய்மண் இங்கே
வேதனையாற் துடிக்கிறது. உலகின் மூத்த
மொழியிறந்து போகிறது. எதிரி வானின்
மேகத்தில் மறைந்திருந்து வீசும் குண்டால்
அழிகிறதே திருநாடு; விம்மி, விம்மி
அழுகிறதே, அடதமிழா! நீயேன் இங்கு
பழிசுமந்து வாழ்கின்றாய். எழும்பு, உன்னை
படுத்திருக்க வோடாவுன் அன்னை பெற்றாள்.

பெற்றெடுத்த தாய் களத்தில், கூடவந்து
பூத்தாளே உன்தங்கை, அவள் களத்தில்
கற்பனைக்கு வடிவமைத்த உனது பிள்ளை
களத்தினிலே... நீமட்டும் தெருவில் நின்று
சொற்பொழிவு செய்கின்றாய்; சொரணை யற்று
சோறருந்திக் கிடக்கின்றாய்; போதும் உன்னில்
அற்புதங்கள் விளையட்டும்; வாசல் தேடி
ஆடிவந்த பகையெரிய எழுந்து வாடா!

வந்தபகை வாசலிலே; வலிமை கொண்ட
வரிப்புலிகள் போரினிலே; தமிழா! எங்கள்
சந்ததியே சமர்க்களத்தில் ஆடும் நேரம்
சாவுவரும் என்றஞ்சிக் கிடந்தால் உன்னைச்
சொந்தமென்று சொல்வதற்கு என்ன உண்டு?
சோற்றிலுரு வானசதைப் பிண்ட மென்றே
உர்தனுக்குப் பேரிருக்கும், வேண்டாம் இங்கே
ஊர்பிடிக்க வந்தவரை எரிப்போம் வாடா!

வீரத்தில் விளையாடி, விளைந்த வீரர்
வெங்களத்தில் நின்றாடிக் கனத்த போரின்
பாரத்தைச் சுமக்கின்றார், பகைவன் தங்கும்
படைவீட்டில் பாய்கின்றார், இனியுன் கண்ணின்
ஈரத்தைத் துடைத்துஎறி, எழுந்து நின்று
எதுவரினும் எதிர்கொள்ளு, பகையை வென்று
தூரத்தே தூக்கியெறி, களத்தில் உந்தன்
துணிவறிந்து பகையோடக் களத்தில் வாடா!

வேலெடுத்து, வாளெடுத்து, பகைவர் அஞ்ச
வில்லெடுத்த பரம்பரையின் விழுதே! இன்று
காலெடுத்து நடப்பதற்கும் பயந்து நீயேன்
காற்செருப்பாய் வாழ்கின்றாய், தமிழன் என்ற
நாலெழுத்தைக் கேட்டவுடன் எதிரி மேனி
நடுநடுங்க வேண்டாமோ? தாயின் வீரப்
பாலருந்திக் கொண்டவனே! எழடா வந்த
பகைவனுக்குக் குழிவெட்டிப் புதைப்போம் வாடா. □□




மு. அநாதரட்சகன்
எழுதிய

## ஆத்மாக்கள்

அன்று அதிகாலையிலேயே வீட்டைவிட்டுக்கிளம்பியவன், உள்ளமும் உடலும் வாடிச் சோர்ந்த நிலையில் வீடு திரும்புகிறேன். பல நாட்களுக்குப் பின் நீண்டதூரத்துக்கு சைக்கிளில் பயணம் செய்த களை; பயணத்தின் நோக்கம் நிறைவு பெறாத அயர்வு; நான் முற்றாகத் தளர்ந்து போகிறேன்.

அவள் எங்கோ ஆறுதல்தேடிப்போயிருக்க வேண்டும். வீடு அரவமற்று அமைதியாக இருக்கிறது.

நான் வெளியே போய்வருகிறபோது அவள் எதிரில் நின்று வரவேற்கும் சம்பிரதாய வழக்கம் படிப்படியாக மறைந்து வருவதாகத் தோன்றுகிறது. ஏதோ சகிக்கமுடியாத இழப்பு ஒன்றைச் சந்தித்த அவஸ்தையால் வீட்டில் எல்லோரது மனங்களும் விகாரப்பட்டுப்போய் இருண்டு கிடக்கின்றன.

அவனை அந்த இரக்கமற்றவர்கள் இழுத்துச் சென்றதிலிருந்து எங்களை அவநம்பிக்கை சூழ்ந்து கொண்டுள்ளது.

அவன் இப்போது எங்கு எப்படி இருக்கிறானோ...!

அவன் மேல் எவ்வளவு அன்பாக இருந்தோம்...!

நினைக்க மனதில் தவிப்பாக இருந்தது.

செஞ்சிலுவைச் சங்கத்துக்கு கொடுத்த மனு வெற்றியளிக்குமோ...? பயனற்றுத்தான் போய்விடுமோ... சந்தேகம் என்னுள் கிளர்ந்தெழுகிறது. அடிக்கடி முகம் காட்டும் அவனின் நினைவுகளால் அலைக்கழிக்கப்பட்டுக்

கொண்டிருக்கிறேன். மனச் சஞ்சலமும், பசியும் உடல் அசதியைத் தருகிறது. பானையிலிருந்து நீரைப் பருகிவிட்டு விறாந்தை ஓரத்தில் கிடந்த படுக்கை மேல் சாய்கிறேன்.

அப்போதுதான் வீட்டுக்கு வந்தவள், என்னருகில் வந்து ஆவல் மிக்கவளாகக் கேட்கிறாள்.

''போன அலுவல் என்னப்பா....! செஞ்சிலுவைச் சங்கத்திலை விசாரிச்சினீங்களோ......! நேற்றைக்கும் சிலரை விட்டதாம்...!''

வழமைபோல இன்றும் நான் நம்பிக்கையிழந்து வெறுங்கையுடன் வந்திருக்கிறேன். இது மன்னிக்க முடியாத குற்றம் ஒன்றை இழைத்துக் கொண்டிருப்பதாக அவளுக்குப்பட்டிருக்க வேண்டும்.

''என்ரை ராசா என்னட்டை வரவேணுமெண்டு எத்தினை கோயிலுக்கு நேத்தி வைச்சிருக்கிறன். அந்தக் கடவுளுகளும் இரங்காயினமோ......? என்ரை பிள்ளை எங்கை என்ன பாடுபடுகிதோ...?''

வழக்கமாகிப் போய்விட்ட நச்சரிப்பைக் கேட்க இன்று அவள் மேல் அநுதாபம் மேலிடுகிறது.

''நீ ஒண்டுக்கும் பயப்பிடாதை... இரண்டொரு நாளிலை அவன்ரை முடிவு தெரியும். அந்த அரசடியான் எங்களைக் கைவிடமாட்டார்...!''

எனது இயலாமையை கடவுளிடம் பாரப்படுத்திவிட்டு அமைதியாகிறேன். எனது வார்த்தைகள் அவளுக்கு நிச்சயமாக ஆறுதலை அளித்திருக்குமென நினைக்கவில்லை.

இராணுவம் மகனைக் கொண்டு சென்றதிலிருந்து வேளைக்கு உணவை மறந்தவளாய் தினமும் அழுது தீர்த்தபடி, பழிகிடந்து தன் உடலை உருக்கி அவன் நினைவில் ஆறுதல் தேடிக் கொண்டிருக்கிறாள். அவள் மேல் இரக்கமுற்றுப்பார்க்கிறேன்.

கண்கள் நன்றாகச் சிவந்து வீக்கம் கண்டிருந்தன. உடல் மெலிந்து நாடி நரம்புகள் புடைத்தபடி வெளித்தெரிய, அவளது கழுத்து சிறுத்து விலா எலும்புகள் துருத்திக் கொண்டிருப்பது பரிதாபமாக இருக்கிறது.

அவன் காணாமல் போனதிலிருந்து நானும் உள்ளூர துயரத்தால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன். எனது உறுதிப்பாட்டை அடிக்கடி இழக்க நேருகின்ற போதும் அதை அவளுக்கு வெளிக்காட்டிக்கொள்ள மனம் ஒப்பவில்லை.

எனது அற்ப சம்பளத்தை ஆதாரமாகக் கொண்டு எப்படியோ குடும்ப நிர்வாகத்தை சமாளித்து வருகிறாள். எனக்கு வாழ்க்கைப்பட்டதிலிருந்து, லௌகீகத்தில் அனுபவிக்க வேண்டியவைகளையெல்லாம் தத்தம் செய்துவிட்டு எனக்காவும், பிள்ளைகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்திருக்கிறாள். ஒரு வகையில் இவளெனக்குத் தியாகத்தை வாழ்நாள் முழுவதும் அருகிருந்து உணர்த்துபவளாக நிலைத்து விட்டாள்.

எங்களின் முப்பத்தைந்து வருடகால தாம்பத்திய வாழ்வின் பேறான சொத்து ஆணும், பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள். பிள்ளைகளின் எதிர்காலத்தில்தான் எவ்வளவு நம்பிக்கை; எதிர்பார்ப்புக்கள். இந்தப் போர்க்கால நெருக்கடியில் அவை நேரெதிரிடையாகப் போய்விடுமோ என்ற ஆதங்கம் எல்லாம் எங்களைக் கவலைகொள்ள வைக்கின்றன.

அவைபற்றியெல்லாம் என்னிடம் அடிக்கடி

பேசியுமிருக்கிறாள். இந்த நெருக்கடி வாழ்விலும் அவளுக்கு ஓர் ரம்மியமான எதிர்பார்க்கை உண்டென்றால் அது பிள்ளைகளின் எதிர்கால சுபீட்சமாகத்தான் இருக்கும். அந்த ஆத்மார்த்தமான நினைவுகளின் முன், வாழ்வின் அவலங்களெல்லாம் அடிபட்டுப்போய் விடுகின்றன.

நேற்றைய பத்திரிகையில் படித்த செய்தியை எப்படி அவளிடம்......? மனம் குறுகுறுக்கின்றது. அதை அவள் உள்வாங்கும் பக்குவத்தில் இல்லை என்பதால், எனது பேச்சை மாற்ற முற்படுகிறேன்.

''எனக்குப் பசிக்கிறது காலேலை சாப்பிட்டதற்கு இன்னுமொண்டுமில்லை..'' அவளிடம் ஆதரவாகக் கேட்கிறேன்.

என் நோக்கம் அவளுக்குப் புரிகிறது. நம்பிக்கை இழந்தவளாய் என்னைப் பார்க்கிறாள்.

அந்தப் பார்வை...

நான் தப்பித்துக் கொள்ளும் முயற்சி நிருபணமாகி, என்மேல் குற்றம் காணுவதாக எனக்குள் குறுகுறுக்கின்றது.

சேலைத் தலைப்பால் கண்களை ஒற்றியபடி சமயலறைக்குள் செல்கிறாள். கையை அலம்பிவிட்டு நானும் போய் உட்கார்ந்து கொள்கிறேன்.

ஆக்கி வைத்ததை கோப்பையில் போட்டுக் கொண்டே, ''இஞ்சாருங்கோ... நேற்றேய்ப்பேப்பரிலை கிடந்ததாம், கிணறொண்டுக்கை எலும்புக் கூடுகள் இருந்ததெண்டு.. படிச்சனீங்களே.... ? ஆமி பிடிச்ச பிள்ளையளின்ரையெண்டு கதைக்கினம்''

அவளது பரிதவிப்பு என்னையும் ஆட்கொள்ள, ''என்னது...?'' - அவளை ஏறிட்டுப்பார்க்கிறேன்.

''நீங்கள் அதைப்பற்றி ஒண்டும்சொல்லேல்லை ..!'' மீண்டும் கேட்கிறாள்.

''எதைப்பற்றி...''

''அந்தக் கிணத்துக்கை கிடந்த...''

''இப்ப அதுக்கென்ன...? உப்பிடி எத்தினை செய்திகள் வரும், பேப்பரிலை; வாறதெல்லாம் உண்மையே...?''

அவளிருக்கும் நிலைமையில் இப்படியான செய்திகள் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். அந்தச் செய்தியின் காத்திரத்தன்மையை அலட்சியம்செய்வது போலக் கூறிவைக்கிறேன்.

நீண்ட பெருமூச்சின் பின்-

''என்ரை பிள்ளைக்கு என்ரை கையாலை செய்த சாப்பாடுதானை பிடிக்கும். தான் ஆக்கினதெண்டால் அவனுக்கு உயிர். எவ்வளவு ஆசையா கேப்பான்...... இப்ப...?''

அவளது நீர் முட்டிய கண்களைப் பார்க்கும் துணிவின்றி தலையைத் தூக்காமல் அரையும் குறையுமாக வாயில் போட்டுக் கொண்டு எழுந்து போகிறேன்.

சமையலறையிலிருந்த அவள், முற்றத்தில் ஏதோ யோசனையிலிருந்த மகளைப்பார்த்து;

''இருட்டிலை என்ன செய்யிறாய் பிள்ளை...? விளக்கைக் கொளுத்தி வை...'' என்றாள்.

அப்பொழுதுதான் காவேரி சுயநினைவுக்கு வருகிறாள். எழுந்து போய் விளக்கை ஏற்றி சமயலறைக்கும், விறாந்தைக்குமிடையில் வைத்து விட்டுச் செல்கிறாள்.

உடல் அசதியால், படுக்கையைவிட்டு எழுந்திருக்க

மனம் இடம் கொடுக்கவில்லை. உலகின் இயக்கத்தை மறந்திருக்க வேண்டும்போலத் தோன்றுகிறது. படுக்கையில் கிடந்தபடியே திரும்பிப்பார்க்கிறேன்.

பக்கத்து அறையில் காவேரி படித்துக்கொண்டிருப்பது தெரிகிறது. அவளது மேசையில் புத்தகங்கள் அங்குமிங்குமாகப் பரவிக் கிடந்தன. எப்போதும் ஒரு நேர்த்தியை, ஒழுங்கைக் கடைப்பிடிப்பவள் அவள். சமீபகாலமாக அவளது நடத்தைகள் என்னுள் சந்தேகத்தைத் தூண்டுகின்றன.

அவள் எதையோ வெறிக்க வெறிக்கப் பார்ப்பதும், மனதுக்குள் கறுவிக் கொள்வதுமாக... முற்றாக மாறி இருக்கிறாள். இப்போதெல்லாம் கருத்தரங்குகள், முதலுதவிப்பயிற்சி, மாணவர் அமைப்பு வேலைகள் என்று சுதா அலைந்து கொண்டிருக்கிறாள். வரவிருக்கும் பரீட்சையில் கூடகவனத்தைக் கலைத்துவிட்டு, இப்படியாகி விட்டாள். எங்களைப் போல அவளுக்கும்தான் எவ்வளவு துயரம்? தன் அண்ணாவைப் பறி கொடுத்ததிலிருந்து. அவன் மேல் எவ்வளவு பாசம் அவளுக்கு...!

இந்த சிறிய குடும்பத்தின் சௌந்தர்யமும், ஆனந்தமும் அவனுடன் கூடவே போய்விட்டதாய்.. ஒவ்வொருவரும் வேறு வேறு போக்கில்...

அந்தக் கொடியவர்களுக்குத்தான் எவ்வளவு மனத்துணிவு.....? சிறிதும் இரக்கமில்லாமல் பெற்றவர்கள் முன்னால் அடித்து.. இழுத்துச் செல்ல...... எப்படி...?

அன்று நடந்த அனர்த்தங்கள் ஏதோ நேற்று நடந்து முடிந்தவை போல என் நினைவில் விகாரமாய் நின்று நெருடிக்கொண்டிருந்தன.

ஊரையே குலுக்கி எடுத்தபடியிருந்த வேட்டுக்கள்...!

வானத்தில் வட்டமிட்ட விமானங்களின் பேரிரைச்சல்...!

கடலிலிருந்து வந்த எறிகணைகளின் அதிர்வுச் சிதறல்கள்...!

இன்னும், அதிரவைத்த குண்டுகள்...! இரைச்சல்கள்...! மரணஓலங்கள்...!

தொடர்ந்து, இராணுவம் வந்துவிட்டதாகக் காற்றுவாக்கில் வந்த செய்தி...!

மக்களுடன் மக்களாக கோயிலில் தஞ்சம்...!

கோயிலை ஆக்கிரமித்தவர்கள் செய்த அடாவடித்தனங்கள்...

இறுதியில், அவனையும், அவனையொத்தவர்களையும் இழுத்துச்சென்றது....

அந்தக் கொடூர நிகழ்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுத்து நிற்க, இயலாமை மெல்ல மெல்ல உருவெடுத்து பிணமாய் அழுத்துகிறது. மனதில் ஆர்ப்பரித்த நினைவுகள் அடங்காமையினால், எழுந்து காவேரியின் அறையை நோக்கி நடக்கிறேன். அவள் எதையோ ஆழ்ந்து படித்துக் கொண்டிருப்பது தெரிகின்றது.

எனது வருகையை சற்றும் எதிர்பார்த்திராதவள் போல எழுந்து நின்றாள்.

'சுதந்திரப் பறவை' என்ற புத்தகத்தின் மேல் தன் பார்வையை பதித்தவளாக,

''என்ன அப்பா...?'' என்றாள்.

''வாறமாதம் சோதினையெல்லே வருகுது. நீ படிக்கிறதாகவும் தெரியேல்லை...''

அசிரத்தையாக முகத்தைத்திருப்பினாள்.

''......''

''கொண்ணன்ரை நிலைமைதான் அப்பிடிப்போச்சுது. நீ எண்டாலும் எங்களுக்கு...''

''......''

''கொம்மாவும் நோயாளியாப் போனா. அவவுக்கு ஆறுதலாய் நீ......''

''அப்பா, இப்ப ஆருக்கு ஆர் ஆறுதல் சொல்லிறது. அண்ணாவை அவங்கள் கொண்டு போனதாலை தான் அம்மா இப்படி...... அண்ணாவின்ரை கவலை எனக்கில்லையே...''

''.........''

''இதுகளுக்கெல்லாம் ஒரு முடிவுகாணவேணும். இப்பதான் எனக்கும் உண்மைகள் தெரியுது''

''என்ன......?''

''இந்த அவலங்களெல்லாம் எங்களுக்கு மட்டுமே அப்பா......? ஆமி வந்து போனதாலை ஒவ்வொரு குடும்பத்திலையும்தானை இழப்பு......! இண்டைக்கு இந்த மண்ணிலை வாழுறவை எதையாவது பறிகொடுத்து விட்டுத்தான் வாழுகினம். குறைஞ்சது நிம்மதியைத் தன்னும் இழக்காமலில்லை ..''

அவளது பதில் மின் வெட்டாக வந்து பல உண்மைகளை எனக்கு உணர்த்துகிறது.

''அப்ப ... இதுகளுக்கெல்லாம் முடிவு என்ன...? நீ உன்ரை பிடிவாதத்தை விடமாட்டாய்... அப்படித்தானை...?''

''.........''

அவள் போக்கில் உடன்படாத தந்தையாய் மீண்டும் கேட்கிறேன்.

''நாங்கள் எக்கேடு கெட்டாலும் உனக்குக் கவலையில்லையெண்டு சொல்லு...''

''அண்ணாவை நாங்கள் பறிகொடுத்ததுக்கு நீங்களும் தான் காரணம்''

அவள் குரல் உணர்ச்சி வேகத்தில் விசும்பலாக வெளிவந்தது. நான் அதிர்ந்து போகிறேன்.

''அவர் இயக்கத்துக்குப்போக ஒரு முறைக்கு இரண்டுமுறையெல்லே நீங்கள் போய்க் கூட்டி வந்தனீங்கள்... அப்பிடிப்போயிருந்தால்... வீணாக அவங்கட கையிலை அகப்பட வேண்டி வந்திராது ...!''

அவளது வார்த்தைகள் வன்மமாக வெளிப்பட்டன.

நீண்ட மௌனத்தின் பின் எதுவும் பேச இயலாதவனாய் எனது படுக்கைக்குச் செல்கிறேன்.

பக்கத்தில் மனைவியும் படுக்கையைவிட்டு எழுந்திருந்தபடி தனது வழமையான பல்லவியை ஆரம்பிக்கிறாள்.

மகன் இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பான் என்ற தவிப்பு அவளுக்கு நித்தியமாய்ப் போய்விட்டது.

''இப்பவெல்லாம் எவ்வளவு குளிர்...... என்ரை பிள்ளைக்கு போர்வை இருக்குதோ...? நித்திரை வருகிதோ...?'' என்ற விசாரணையில் தொடங்கி...

''அவனுக்கு மாத்திக் கட்ட உடுப்புகள் இருக்குதோ...?'' என்றெல்லாம் என்னிடம் ஆதங்கப்பட்டுக் கொள்கிறாள்.

முன்பு அவன் உறக்கத்திலிருந்த வேளைகளில் எத்தனை தடவைகள் எழுந்துபோய் போர்வையைச் சரிசெய்திருக்கிறாள்.

இப்போதெல்லாம் மகனை அடிக்கடி கனவில் காண்கிறதாய் கூறிக்கொள்கிறாள். இடையே இரத்தமும், ரணமும் ..... என்று பயங்கரக் கனவு கண்டு

ஓவென்று கதறியழுவதும் வழக்கமாகி விட்டது.

இன்றும் அப்படித்தான் ஏதோ நிகழ்ந்திருக்க வேண்டும். எழுந்திருந்து...

''என்ரை பிள்ளை அம்மாவெண்டு கதறக் கதற .. அவங்கள் அடிச்ச அடி .. என்ரை கண்ணுக்கு முன்னாலையே அந்த அடி அடிச்சவங்கள்...... இப்ப எப்பிடி ..?''

- என்று அவள், தரையில் தலையை மோதியபடி தேம்பித்தேம்பி அழுகிறாள்.

அறையில் படுத்திருந்த காவேரிக்கும் மனம்பொறுக்கவில்லை. அண்ணன் மேலுள்ள பிரியத்தால் தாய்படும் அவஸ்தை அவள் நெஞ்சையும் உலுக்கியிருக்க வேண்டும். தாயின் அழுகையைக் கேட்டு வெளியே வந்தாள். அவள் கண்களும் பனித்திருந்தன.

அவளை வருத்தும் ஈடு செய்யமுடியாத பிரிவுத் துயர் என் நெஞ்சையும் அழுக்கழிக்கிறது. வேதனையைப் போக்க என்ன செய்வதென்று தெரியாமல் அங்கலாய்ப்புறுகிறேன். மகனை எப்படியும் அவர்களிடமிருந்து மீட்கவேண்டுமென்ற உறுதி என்னுள் இறுகிக்கொண்டிருந்தது.

விளக்கின் மங்கல் ஒளியில் அவள் முகம் வாடிக் கிடப்பது தெரிகின்றது. அவளது விசும்பல் ஒலியும் படிப்படியாக அமைதி கண்டது.

அவள் தூங்கிப் போய் விடவே, காலையில எழுந்ததும் அவளுக்கு மீண்டும் நம்பிக்கையளிப்பதான தேறுதலை அளிக்க வேண்டும். அது எவ்வாறென மனம் பலவிதமாய் அலை பாய்ந்த வண்ணம் இருந்தது.

அதிகாலையில் எங்கிருந்தோ வந்து விழுந்த 'ஷெல்'லின் பயங்கர ஒலியினால் அதிர்ந்து எழுகின்றேன். அவளும் திடீரென விழித்துக்கொண்டு....

''ஐயோ......! என்ரை பிள்ளையைக் கொல்லுறாங்கள்...... கொல்லுறாங்கள்...... என்ரை பிள்ளையை...... என்ரை பிள்ளையை .....'' எனப் பெருங்குரலெடுத்து அலறுகிறாள்.

பதட்டப்பட்டவளாய், கலைந்த சேலையை அள்ளிப்பிடித்த வண்ணம் வெளியே ஓடுவதற்கு முற்படுகின்றாள்.

மகள் படுக்கையை விட்டு எழுந்து, பதறித் துடித்தபடி வந்து தாயை அணைக்கின்றாள். அவள் எழுப்பிய ஓலம் என்னையும் திடுக்கிட வைக்கின்றது. அப்போது அவளது முகத்தை உற்றுப்பார்க்கிறேன்.

முகத்தில் ஆவேசம் கிளர்ந்து கொண்டிருந்தது. விழிகள் இரண்டும் பீதியால் வெளியே பிதுங்கிக் கிடக்கின்றன. வார்த்தைகள் வழமைக்கு மாறாக சுயத்தை இழந்து வெளிப்படுகின்றன.

அவளில் பிள்ளையைத் தேடும் உறுதிப்பாடு தெரிகின்றது. □□

*இந்தப் புதியயுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும். சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம்படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.*

—தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

எனக்குக் கொஞ்சம் உப்பு வேணும்.
என்றாலும், இப்போது உன்னிடத்தில்
நான் இரந்து கேட்கப் போவதில்லை!
இல்லை யெனில் பக்கத்து வீட்டிலும்
நான் பல்லிளித்து வாங்கப் போவதில்லை!
வல்லைவெளியில் என்றாலும்
உப்புக்காக நான் அலையப் போவதும் இல்லை!
கடைதனில் வாங்குவதா?
விலை கொடுத்தா? அதுவும் வேண்டாம்.
நான் கேட்கும் உப்புக்கு
விலை மதிக்க முடியாது.
காலா காலமாக எங்கேயிருந்து
எமக்குக் கிடைத்ததோ, அங்கேயிருந்துதான்
இப்போ உப்பு வேணும்.
ஆனால், சற்று மாறுபட்ட நிறத்தில்
அதுதான் அறுநூற்றி இரண்டு வீரர்களின்
குருதியினால் நனைந்த உப்பு!
செந்நிற உப்பு!!
வெப்பக் கனல் வீசும், வெட்டவெளிக் காற்றிடையே
வெஞ்சமர் புரிந்து கொண்ட
குருதியால் குளிப்பாட்டப்பட்ட உப்பு!
அதுதான் எனக்கு இப்போ வேணும்.
இப்பொழுது இல்லாவிட்டாலும் எப்பொழுதாயினும்......!
ஏனெனில்,
வீரம் மிகுந்தது!
வரலாறு கொண்டது!!
எனக்குக் கொஞ்சம் உப்பு வேணும்.
வெப்பக் கனல் வீசும், வெஞ்சமரிற் கனன்ற
குருதி தோய்ந்த உப்பு!




தொண்டையூர் துவாரகன்
எழுதிய
**உப்பு வேணும்**

சபா. ஜெயராசா
எழுதிய




# இசையும் ஆக்கச் செயல்முறையும்

பூர்வீகமானதும், உள்ளார்ந்த வலுவுடையதுமான இசையின் ஆக்கச்செயல் முறையானது, உளவியலாளரின் கவனத்தை ஈர்த்து வந்துள்ளது. சமூகச் செயல்முறை, கல்விச் செயல்முறை, இசையின் ஆக்கச் செயல்முறை என்பவற்றுக் கிடையே தொடர்ச்சியான இடைவினைகள் காணப்படும்.

செவிவழித் தொடர்பு ஊடகமாகும் இசை, சுரஒழுங்கு, சந்தம், உள்ளார்ந்த இசைவு, தொனி, வண்ணம் முதலிய தனிமங்களைக் கொண்டது.

உளச்சலனங்களுக்கும், சுர ஒழுங்கமைப்புக்குமிடையே நேரடியான இணைப்புண்டு. ஒவ்வொருவிதமான சுர அமைப்பும் ஒவ்வொரு விதமான உளச்சலனங்களைத் தூண்டும். வாழ்வியல் அனுபவங்களின் சேமிப்புக் களஞ்சியமாக ''உள்ளம்'' விளங்குகின்றது. அனுபவங்கள் ஒவ்வொன்றினதும் செறிவும், வீச்சும் தனித்துவமானவை. இவற்றை வெளிக்கொண்டு வருவதற்குரிய வலிமையானதும், இதமானதுமான தூண்டியாக, சுர ஒழுங்கமைப்பின் வழியாக உருவாக்கப்படும் ராகங்கள் விளங்குகின்றன.

சுர ஒழுங்கமைப்பானது தற்செயலாகவோ, எழுந்தமானமாகவோ உண்டாக்கப்படவில்லை. மனித வளர்ச்சி பல படிமுறைகளைக் கொண்டது. குழந்தை. கட்டிளமை, இளமை, முதுமை, அதிமுதுமை, என்று படிநிலைகளை வகுத்துக் கூறலாம். படிநிலை வளர்ச்சியில் வாழ்க்கை அனுபவங்களும் வேறுபடுகின்றன. சமூகப் பின்புலத்தில் மனிதனது படிநிலை வளர்ச்சியை ஆதாரமாகவைத்தே சுரவரிசைகள் உருவாக்கப்பட்டிருக்கலாம். மனித வளர்ச்சிப் படிநிலைகளும், படிநிலைகளுக்குரிய அறிகை வேறுபாடுகளும் உணர்ச்சி வேறுபாடுகளும் உளவியலாளரின் உற்று நோக்கலை ஈர்த்து வந்துள்ளன.

மனித வளர்ச்சியைப் பிரிவுகளாகப் பிரிக்கும் மரபு, வளர்ச்சியடைந்த காலத்திலே சுரவரிசைகளும் உருவாக்கப்படலாயிற்று. ''உள்ளம்'' என்பதன் வளர்ச்சியும், மனிதனது ஆக்கத்திறன் வளர்ச்சியும் ஒன்றிணைந்திருந்தன.

சுர ஒழுங்கமைப்பு ஆக்கப்படுவதற்கு முன்னர் ''சந்தம்'' என்பதன் மீதே அதிக கவனம் செலுத்தப்படலாயிற்று. இசை வரலாற்றை அறிந்தவர்கள் இது ஓர் அகிலப் பண்பாக விளங்குவதைச் சுட்டிக் காட்டியுள்ளனர். மனித உடல் உழைப்பின் வழியாக எழுந்த தசை நார் அசைவுகளுக்கும், சந்த ஒழுங்கமைப்புக்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. ஓரே செயலை மீண்டும் மீண்டும் செய்தல்

உடல் உழைப்பின் ஒரு பிரதான பண்பு. ஒரே ஒலியை மீண்டும் மீண்டும் ஒழுங் கமைத்தல் சந்தத்தின் பண்பு.

''உள்ளார்ந்த இசைவு'' என்பது மனித நுண்மதிச் செயற்பாடுகளுடன் இணைந் தது. இசை வளர்ச்சியின் போது பிற்காலத் தில் ஏற்பட்ட ஒரு பண்பாக உள்ளார்ந்த இசைவு கொள்ளப்படுகிறது.

பொருளியல், சமூகவியல் நிலைப்பட்ட முரண்பாடுகளின் மத்தியிலே ஒத்திசைவை ஏற்படுத்துதல் சமூகத்தின் தேவையாக இருந்தது. ஒத்திசைவு, சமூக இயக்கத்தைச் சீர்ப்படுத்தியது.

இசை ஆய்வாளர்கள் பூர்வீக ஒத்தி சைவுகளுக்கும், நவீன ஒத்திசைவுகளுக்கு மிடையே வேறுபாடுகள் புலப்படுதலைச் சுட்டிக்காட்டியுள்ளனர். சமூகச் செயல் முறை வேறுபாடுகளின் அடிப்படையில் இதனை நோக்குதல் தெளிவு தருவதாக அமையும்.

இசையின் ஆக்கச் செயல்முறையின் மூலக்கூறாக அமைவது ''இசைக் கருத்து வம்'' (*Musical idea*) ஆகும். இசைக் கருத்துவம் சொல்வடிவாகவோ, இராக வடிவாகவோ, குறியீட்டு வடிவாகவோ தோன்றலாம். இசைக்கருத்துவத்தை சொற் கட்டு, இராகம், தாளம் என்ற அமைப் பினுள் கொண்டு வருதல் படிமலர்ச்சி யின் அடுத்த கட்டமாகும்.

இசையின் ஆக்கச் செயல்முறையில் ஈடுபடுவோர் நான்கு பிரிவாக வகுக்கப் படுகின்றனர்.

(அ) எப்பொழுதும் இசைக்கருத்துவங் களால் தூண்டப்படுபவர்கள்; வாழ்க் கையின் ஒவ்வொரு கணங்களையும் இசையுடன் தொடர்புபடுத்துபவர்கள் இப்பிரிவில் அடக்கப்படுவார்கள். இவர் களின் ஆக்கங்கள் சில சமயங்களில் அவ்வப்போது தோன்றி முழுவடிவம் பெறாது மறைந்து விடுதலும் உண்டு.

(ஆ) திட்டமிட்டு இசை வடிவங்களை ஆக்குவோர் இரண்டாவது வகையில் இடம் பெறுவர். குறிப்புக்களைத் தொடர்புபட எழுதிப்படிப்படியாக அதை வளர்த்து முழு வடிவம் ஆக்கும் திறன் இங்கு காணப்படும். மேலைத் தேய இசையில் பீத்தோவனது ஆக்கங் களை இப்பிரிவில் அடக்கலாம்.

(இ) வளர்ந்துவரும் ஒரு இசைவடி வத்தை முழுமையாக்கும் ஒரு செயல் முறையில் ஈடுபடுவோர் இப்பிரிவில் இடம்பெறுவர். கர்நாடக இசையின் மும்மூர்த்திகள் இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறத்தக்கவர்கள்.

(ஈ) புதிதாக ஒரு இசைக்கோலத்தை ஆரம்பிக்கும் முன்னோடிகளாக விளங்குவோர் இப்பிரிவில் இடம் பெறுவர். இந்துஸ்தானி இசை, வங்காளத்தின் நாட்டார் இசை என்பவற்றை ஒன்றிணைத்து ''இர வீந்திர சங்கீதம்'' உருவாக்கப்பட் டமை இதற்கு ஒரு எடுத்துக்காட் டாகும்.

இவ்வாறாக இசையின் ஆக்கச் செயன் முறையை ஆராயும்பொழுது, குறித்த காலகட்டங்களுக்குரிய சமூக இயல்பையும் இருப்பையும் தொடர்புபடுத்திப் பார்க் காத விடத்து, இசைபற்றிய முழுமை யான தரிசனத்தைப் பெறமுடியாது.

பூர்வீகப் பொதுவுடமையில் கூட்டி சையின் ஆக்கம் மேலோங்கியிருந்தது. பாடலும், ஆடலும், தொழில் புரிதலும் ஒன்றிணைந்திருந்தன. உழைப்பின் ஒன்றி ணைந்த கூறாக இசை விளங்கியது.

நிலைபேறு கொண்ட பயிர்ச்செய்கை முறையும், கிராமிய வாழ்க்கையும் உடல்

உழைப்பினால் பயிர்ப்பெருக்கத்தை ஏற்படுத்திய பொருளாதாரச் செயற்பாடுகளும் வரன்முறையான பல்வேறு இசை வடிவங்கள் வளர்வதற்குத் தூண்டுதல் தந்தன.

தனிமனித முனைப்புக்கள் மேலோங்கத் தொடங்க, தனிமனித எதிர்பார்ப்புக்களும், திருப்திகளும் இசை ஆக்கச் செயல் முறையிலே செல்வாக்குச் செலுத்தின. பூர்வீகப் பொதுவுடமையில் உடல் இயக்கங்களுடன் இணைந்த இசையானது, ''உள'' ஆற்றல்களின் வளர்ச்சியோடு மனத்துக்கினிய பொருளாக மாற்றப்பட்டது.

சமூக வளர்ச்சியோடு இசைக்கல்வி நிறுவனமயப்பட்டு வளரலாயிற்று. இசையை ஆக்குபவர், வியாக்கியானம் செய்பவர், கேட்பவர் என்ற காரணிகளாவோர் விருத்தியடைந்தனர். இசையானது ஆக்குபவருடன் தொடங்கி வியாக்கியானம் செய்பவர்களாற் பரப்பப்பட்டு கேட்போரைச் சென்றடையும் விரிவு பெற்றது.

இசையை ஆக்குபவர் ஒரு காலப் பெட்டகமாகக் கருதப்படுவர். காலத்தின் ஆளுமையும் தனிமனித ஆளுமையும் ஒன்றிணைந்து இசையாக்கம் நிகழ்கிறது. இவற்றின் அடிப்படையாகவே இசைத் தனித்துவமும் எழுகின்றது. இசையாசிரியனுக்கு ஏற்படுகின்ற வயது, அனுபவ முதிர்ச்சிகளும் இசை ஆக்கத்திலே செல்வாக்குச் செலுத்துகின்றன. உதாரணமாக, பீத்தோவனுடைய முதலாம் சிம்போனி, ஒன்பதாம் சிம்போனி முதலியவற்றை ஒப்பிட்டு ஆராய்பவர்கள் முதிர்ச்சி நிலமைகளைத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இசைமரபுகள், அவரது ஆரம்பகால இசையாக்கங்களிலே ஆழ்ந்த செல்வாக்குச் செலுத்தியது. அவரது பிற்காலத்தைய ஆக்கங்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இசைமரபுகளில் இருந்து விடுபடும் செல்நிலைகளை உள்ளடக்கியதாகக்காணப்படுகின்றன.

இசை வடிவங்களை ஆக்குவோருக்கும், பெறுவோருக்குமிடையே நடுநின்று தொடுப்பவராக, வியாக்கியானம் செய்வோர் விளங்குகின்றனர். இந்நிலையில் எழுத்தாக்கங்களுக்கும், இசையாக்கங்களுக்குமிடையே அடிப்படை வேறுபாடுகள் காணப்படுகின்றன. எழுத்தாளனை அவனது எழுத்துக்கள் வாயிலாக வாசகன் நேரடியாகவே சந்திக்கிறான். ஆனால் இசையைப் பொறுத்தவரை, இசை ஆசிரியரது ஆக்கங்களை வியாக்கியானம் செய்பவர் (பாடுபவர்) ஊடாகவே தரிசிக்கவேண்டியுள்ளது. செவிவழித் தொடர்பியலில் இது ஒரு பிரதான பண்பாகக் கொள்ளப்படுகின்றது.

இதன் பொருட்டுத்தான் வியாக்கியானம் செய்பவர், ஆழ்ந்த இசைஞானம் கொண்டவராக இருத்தல் வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது. இசையை ஆக்கியவரது ஆக்கத்திறன் சுர அமைப்புக்களினால் வெளிப்படுத்தப்படுகின்றது. இசை ஆக்கியோனது செய்தியை வெளிப்படுத்துநராகவே வியாக்கியானம் செய்பவர் விளங்குகின்றார்.

இசை உருப்படிகள் உயிரோட்டமுள்ளவை. பாடுவோரின் இயல்புக்கும், ஆளுமைக்கும் ஏற்றவாறு அவற்றுக்குரிய வியாக்கியானம் வேறுபடும். வியாக்கியானம் மூல ஆக்கத்தைத் திரிபுபடுத்துவதாக இருத்தலாகாது — ஏமாற்றுவதாகவும் இருத்தலாகாது.

சில சமயங்களில் ''வியாக்கியானம் செய்தல் என்பது விமர்சிக்கப்படுகின்றது. இசையில் வியாக்கியானம் செய்தல் தேவையற்றது, எனக் கருத்தும் உண்டு. குறித்துரைக்கப்பட்ட சுரவரிசைகளைக் 'கராராகப்' பின்பற்றிப் பாடவேண்டியதுதான்.

அதனை மீறிச் செல்லக்கூடாது என்ற அபிப்பிராயங்களும் உள்ளன. உலக இசை வரலாற்றை ஆராய்பவர்கள் இக்கருத்தை மறுதலித்து இருக்கின்றனர். ஓர் இசை யாக்கத்தை வெவ்வேறு பாடகர்கள் தமது ஆளுமையினூடாகப் பாடும்போது வேறு வேறுபட்ட இசை உணர்ச்சிகளும் அழகும் தோன்றுதல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இசையின் ஆக்கச் செயல்முறையை ஆராய்வோர், ஓவியத்துக்கும், இசைக்கும் பொதுவான பல எண்ணக் கருக்களை முன் வைக்கின்றனர். வண்ணம், செம்பரவல் (Texture), புலன் ஆழம், சமநிலை, உள்ளார்ந்த இயைபு, முதலியவை இவற்றுக்குச் சில எடுத்துக் காட்டுகளாகும்.

இசையும், கருத்துக்களும் மிக வலிமையாக ஒன்றிணையும் இன்றைய காலகட்டத்திலே இவ்வாறான ''அடிப்படை'' ஆய்வுகள் மீது கவனம் செலுத்துதல் சிறந்த படைப்புக்களை உருவாக்குவதற்குரிய ஒரு ''தள அமைப்பு'' வேலையாக அமையும்.

□□

### உயிரைக்கொடுத்து ..

புரட்சியிலே பெண்ணினத்தை
இணைத்து - தமிழ்
ஈழத்திலே புது மறையை
வகுத்து
எம் பெண்ணினத்தின் கண்ணீரைத்
துடைத்து
புது வடிவம் அவர்களுக்கு
கொடுத்து
பேதை போன்ற வாழ்வதனை
தடுத்து
பெண்ணடிமை விலங்கதனை
உடைத்து
சீதனப் பேயதனை நெரித்து
இதன்
சிந்தனையை அடியோடு
தகர்த்து
சமத்துவத்தை அவர்களுக்கு
கொடுத்து - குடி
சண்டைகள் இல்லாமல்
தடுத்து
சரித்திரத்தை புதுமுறையாய்
தொகுத்து
அமைத்திடுவோம் இவற்றை
உயிர் கொடுத்து(ம்)

—ப. தயாளன்

''வெளிச்சம்''
கலை, இலக்கிய சமூக இதழ்

ஓவியம்:
தயா

உருவாக்கம்:
ஆசிரியர் குழு

அச்சு:
ம. மரியதாஸ்

இதழ் அமைப்பு:
இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

வெளியீடு:
விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்




கோளாவிலூர்
கிங்ஸ்லி
எழுதிய

**எங்கள் பயணம்**

தொப்பிக்கல்மலை — கிழக்கு காட்டுப்பகுதியில் இராணுவம் ஊடுருவி, பதுங்கியிருக்கும் செய்து எல்லா முகாம்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

விசாலகன், விசேட படைப்பிரிவு போன்ற பலமான நிலைகளைத் தவிர ஏனைய நடுத்தர சிறிய முகாம்களின் நாளாந்தக் கடமைகள் சில பாதுகாப்பின் நிமித்தம் வழமையான நேரங்களில் நடைபெறுவது தவிர்க்கப்பட்டிருந்தது. இதன்படி எமது முகாமில் அன்று சத்தியப்பிரமாணம் காலை 8.45 மணிக்கு நடந்தது.

எமது சிறிய முகாமில் நாங்கள் 11 பேர்தான். மிகவும் அமைதியான - இருள் போன்ற அடர்ந்த காட்டிற்குள் கட்டப்பட்டிருந்த அந்த முகாமுக்குச் செல்கின்ற வழியைக்கூட இலகுவில் கண்டுபிடித்துவிட முடியாது. மாவட்ட படப்பிடிப்பு முகாம் அது. இதன் வெளியமைப்பு இயற்கையோடு இயற்கையாக உருமறைக்கப்பட்டு விட்டாலும், உள்ளே ஒரு நகர்ப்புறத்து வீடுபோன்று ஸ்ருடியோ அமைக்கப்பட்டிருந்தது.

மாரிகாலமென்றாலும் நான்குநாள் பிடித்த அடைமழை சற்றுமுன்விட்டு, அடுத்த மழையை அழைப்பதற்காக அகோர வெயிலொன்று எறித்தது. நாங்கள் ஏறிக் கிடக்கின்ற மலையெல்லாம் புகை போன்று நீராவி கிளம்பிற்று. சல சலவென்று வியர்வை கொட்டுகிறது.

வழமைபோல் அன்றைய முகாம் வேலையைப் பங்கிட்டபொழுது; நானும் முரளிதாசும் 'கிச்சின்' கொட்டிலுக்கு சுவர் வைக்க கூட்டுச்சேர்ந்தோம். நான் மண்வெட்டியும் அவன் கூடையுமாக, இளகிப் போயிருந்த புற்றடிக்குப் போனோம். இதேபோல் அவரவர் வேலையை அனைவரும் துவக்கிவிட்டிருந்தோம். காலை உணவு - எருமைப்பாலில் பாயாசம் தயாராகிக் கொண்டிருந்தது. மத்தியானம் காட்டுக் கோழியிறைச்சி வற்றலை மிகவும் சுவையாக வரட்டி சமைத்துப் பரிமாறுவதாக நரேஸ்குமார் முன்பே கூறிவிட்டார். அவர்தான் அன்று சமையல்முறை; முகாம் பொறுப்பாளரும் அவர்தான்.

இதற்கிடையில் மத்தியானத்திற்கு அனைவரும் போய் பொங்கிப் பாய்கின்ற பக்கத்து ஆற்றில் குதித்து, நீராடி, படம் பிடித்து நந்தார் கொண்டாடுவது என்ற நேற்றைய திட்டத்தைப் பற்றிய கதைகள், பற்பல கோணங்களிலும் போட்டுக்கொண்டு வேலை ஓடியது.

எல்லோரும் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் ஓடி ஓடி வேலையை முடிக்கப் பார்க்கின்றனர். பலமுறை வானொலிக் கருவி அழைத்துக்கொண்டிருக்கிறது. எவரும் கவனிப்பதாக இல்லை மீண்டும்—''ஜேசுதாஸ் ஜேசுதாஸ் ஓவர்'' எனஅழைக்க, நான் போய் எடுத்தேன். பிரதான முகாம் கதைத்தது. உடனடி வானொலி மூல அழைப்பை பொறுப்பாளரிடம் கூறினேன். விடயமும் பரிபாசையில் அறிவிக்கப்பட்டுவிட்டது.

தாக்குதல் படப்பிடிப்புக்கு நாங்கள் 'றொட்டேச'னில் போவதுதான் வழக்கம். இந்தமுறை நானும், பிறேமாவும். சுணக்கமின்றி உடைகளை மாற்றிக் கொண்டு தயாராக இருக்கிற 'கமரா'ப்பையைத் திறந்து மீண்டும் ஒருமுறை சரி பார்த்தோம். நான் 'ஸ்டில்'; அவன் 'வீடியோ' ஆளுக்கொரு பையை தோளில் போட்டுக் கொண்டு புறப்படும் தருணம், 'திடு திடு' என்று காடு அதிர, அடுத்த மழை வந்து பிடித்தது. தாமதித்தாலும் மாரிமழை விடப் போவதில்லை. மரக்கிளைகளின் இடையே குடை பிடிக்கவும் முடியாது. எனினும் மழைநீர் கசியா வண்ணம்''நீர்க்காப்புபை'' இருந்தமையால் நாங்கள் பிரதான முகாமை நோக்கி நடந்தோம். மழை அள்ளி முழுக வார்ப்பதுபோல் பெய்தது.

பிரதான முகாமில் பாடசாலைகள் மாதிரி அமைந்திருந்த பெரிய கொட்டில்களுக்குள் அனை வருக்கும் தாக்குதலின் கடைசி விளக்கம் அளிக்கப்பட்டது. நாங்கள்போகின்ற போது, மழையோடு மழையாக அணிகள் மைதானத்தில் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. நீண்ட தூரத்தில் அல்லது எல்லையில் நடைபெறப்போகும் தாக்குதல் என்பதால் எல்லோருக்கும் மூட்டைமுடிச்சுக்கள் பெரிதாக இருந்தன. அதிலும் பெண் போராளிகள் பருமனான பைகளை தலையில் ஏற்றிக்கொண்டு அணி வகுத்து நின்றனர்.

நானும் பிறேமாவும் தாக்குதல் பொறுப்பாளரைச் சந்தித்தோம். அவர் எங்களுக்குச் சிலவிடயங்கள் சொன்னார். அதன்படி நாங்கள் குறிப்பிட்ட அணியில் சேர்ந்து கொண்டோம். பெண் போராளிகளின் தாக்குதல் பொறுப்பாளராக டெனசியும், வளர்மதியும் இருந்தனர். அனைத்து ஆயத்தங்களையும் செய்து கொண்டு, அவ்விடத்தில் இருந்து ஒரு பலம் வாய்ந்த இராணுவ அணியாக ஒற்றை வரிசையில் எண்சொல்லிக் கொண்டு எமது நகர்வு ஆரம்பமானது.

ஒரே சீராக பேரணி நகர்கின்றது. நேரம் காலை 11 மணியாவது இருக்கும். எனக்கு அப்போதுதான் பசி தெரிந்தது. வரும்போது பாயாசம் குடிக்கவில்லை என்பதைவிட இரவாவது கொஞ்சம் சோறு சாப்பிட்டிருக்கலாம்...... என்று தோன்றிற்று. நாங்கள் சாப்பாடு எதுவும் எடுத்து வரவில்லை; 'பிஸ்கட்' வகையெதுவும் இல்லை. எடுத்து வந்திருந்தாலும் இப்போது உண்பதற்கு அனுமதியில்லை. இனி எப்போது சாப்பாடு கிடைக்குமோ... என்பதை நினைத்தால் இன்னும் வயிற்றைக் கார்ந்தது.

மழை பௌவ்வல் கட்டிக்கொண்டு இருளாகப் பெய்கின்ற போக்கு, நாளையும் விடுவதாகத் தெரிய

வில்லை. கடல்மாதிரி தெரிகிற பெண்டுகள் சேனை ஆற்றையும் அதனோடு தொடர்புற்றிருக்கிற நீண்ட நீர்நிலைகளையும் இன்னும் சிறு ஆறுகளையும் நாங்கள் கடக்க வேண்டியிருந்தது. பெண்டுகள்சேனை ஆறு, அறுங்கோடை யிலேயே இடுப்பளவு தண்ணி ஓடும். அதைக் கடந்தால்தான் சண்டை நிச்சயம்; நிம்மதி.

மூன்று மைல் நடந்து அந்த சமுத்திர ஆற்றை அண்மித்தோம். 'சொள சொள' வென பேரிரைச்சலுடன் பாயும் அந்த ஆறு, சுமார் 100 மீற்றருக்கு முன்பே எங்களைக் கழுத்தளவு தண்ணீர் பிடித்து விட்டது. சில போராளிகள், நாங்கள் 'மடு' என்று வழங்குகின்ற கிடங்குள் காலை வைத்து பதாரென்று போய்வந்தார்கள்.

ரைபிளுக்கு பொலுத்தீன் போட்டு மாளாது என்பதால் எவருமே போடவில்லை. உணவுப் பொருட்களும், தொலைத்தொடர்புக் கருவிகளும் மட்டும் நீர் கசியாமல் பாதுகாக்கப்பட்டு இருந்தது. ஆற்றை கடவுபடுத்தி விடுவதற்கு, பக்கத்தில் வதியும் கிராமத்தவர் ஐந்தாறு தோணிகள் சகிதம் காத்து நின்றார்கள். தோணிகள் குறிப்பாக ரைபிள்களையும் உணவுப்பொருட்களையும், இதர சாமான்களையும் அக்கரைப்படுத்துவதுக்காகும்.

கரையிலேயே, கழுத்துக்கு மேல் இருந்த தண்ணியை இரண்டு மூன்று தரம் நான் 'வக் வக்' என்று குடித்துவிட்டேன். இருபது இருபத்தைந்து மீற்றர் அகலத்தில், 'கோ... ஓ...' என்ற இரைவுடன் பிய்த்து வாங்கும் ஆற்றின் வேகத்தை, மிதந்து வருகின்ற இறந்த மரக்கட்டைகளின் ஓட்டம் காட்டியது. இதனைக் கடக்கவேண்டும் என்று எண்ணுகிறபோது, என்னையே மறந்து ஒரு அச்ச உணர்வு படர்ந்து; அங்கே போராளிகளின் கூத்தையும் குதூகலிப்பையும் கண்டு அது அகலகிறது. இதேபோல் போன வருடத்து மாரிக்குள் ராணுவம் கடந்துகொண்டு காட்டிற்குள் வரமுற்பட்டு, 6 சிப்பாய்களை ஆற்றில் விட்டு தோல்வியுடன் திரும்பினர். வழியில் தோணியை ஒளித்துவிட்டார்கள் என்ற குற்றத்திற்கு, பதிலுக்குப் பதில் 6 கிராம வாசிகளைப் பிடித்து காலையும் கையையும் கட்டி ஆற்றில் போட்டனர்.

இரண்டு கரையிலும் நின்ற பெரிய மதுர மரங்களை இணைத்து இரு பெரியநைலோன்கயிற்றைக் கட்டி நாங்கள் ஒன்றிலும் பெண் போராளிகள் ஒன்றிலுமாகக் கடந்து கொண்டிருந்தோம். கயிற்றையும் ஆளையும் சேர்த்து இழுத்துக்கொண்டு ஓட பிரயத்தனம் செய்தது ஆறு. அந்த வேளையில் கட்டைகள் வந்தால் ஆள் இல்லை. இவ்வாறு கயிறு வழியாக கடக்கவேண்டியிருந்ததால், நீண்ட நேரம் எடுத்தது. தண்ணீருக்குள் நின்று நின்று உடலெல்லாம் குளிரேறி கடகடவென பல்லடிபட நடுங்கியது. பற்களும் இரு தந்தமும் வலித்தது. பசித்துபசித்து வயிற்றில்ஒரு புது உணர்வு. உடல் சோர்வில் குந்தவும் முடியாது, சரியவும் முடியாது.

தீர்த்தக்கரை மாதிரி இருந்த ஆற்றின் அக்கரையை அரைவாசிப்பேர் வரை கடந்துவிட்டனர். கயிற்றில் சென்று கொண்டிருந்த ஒரு போராளியை ஆற்றின் நடுப்பகுதியில் வைத்து எதிர்பாராத விதமாக வட்டமிட்டுவந்த சுழி இழுத்தடித்துக் கொண்டு போகிறது. அப்பொழுது அனைவரது குதூகலமும் அடங்கிப்போனது. அவன் தன் ரைபிளைக் கழற்றி ஒருமுறை உயர்த்தினான். அந்த ரைபிளை அவன் காப்பாற்ற எண்ணியிருக்க வேண்டும். அவ்வளவுதான் தெரிந்தது. அவனைக் காப்பாற்ற நாலைந்து பேர் பாய்ந்தடித்து நீந்தினார்கள். ஆயினும், அடுத்த

சுழி வரமுன் அவர்கள் அழைக்கப்பட்டு விட்டனர்.

சீறிச் சினத்துப் பாயும் இந்த ஆறு மீது ஆத்திரப் பட்டு எதையோவெல்லாம் சொல்லி முணுமுணுத்துக் கொண்டு திரும்பினேன். ஆற்றையே பரிதவிப்புடன் பார்த்துக்கொண்டு நின்ற பலர், அதில் இருந்து விடு படாமல் இருந்தார்கள். இவ்வாறு ஆரவாரப்பட்டு, ஒரு போராளியையும் பறி கொடுத்து மாலை 6-30 மணியளவில் ஆற்றை மூற் றாகக் கடந்து முடித்தோம்.

மழை சற்றுத் தணிந்து விட்டது. இன்னும் சிறிது தூரம் தண்ணி கடந்து போனால், எல்லாப் பகுதி களில் இருந்தும் சிங்களவர் களால் துரத்திவிடப்பட்ட தமிழர்களின் ஒரு சிறிய கிராமம் வருகிறது. இவர் களுக்கு எமது அரசியல் பிரி வினரால் குடிசை வீடுகளும் சிறிய பாடசாலையும் கட் டிக் கொடுக்கப்பட்டிருக் கிறது. முன்பு இதனையும் இராணுவத்தினர் இரண்டு முறை எரித்துவிட்டு சென் றிருந்தனர். கிட்டத்தட்ட இரவு 7.30 மணியளவில் அந்தக் கிராமத்தை நாம் அடைகின்றபோது,நாய்கள் எல்லாம் சேர்ந்து கிரா மத்தை அமர்க்களப்படுத்தி விட்டன. நாங்கள் இருள் உருவங்களாக நேரே யோய் இரு கிடுகுப் பாடசாலை களுக்குள் அடங்கி னோம். ஆறு கடந்து இராணுவம் வரமுடியாது என்ற வகையில், எம்மை இனங்கண்ட கிராம மக்கள், சினிசினென்ற மழையை யும் முந்திக்கொண்டுவந்து சூழ்ந்து கொண்டனர்.பாட சாலையில் ஆசிரியருக்கு மட்டும் எப்படியோ ஒரு கதிரையும் மேசையும் இருந்தது. நீண்ட நேரம் தண்ணீருக்குள் நின்றி ருந்தமையால்கால் வலித் தது. காலை மடக்கி கொஞ்சம் இருந்தபோது, நீர் ஊறிய நிலத்தில் உடல் பட்டதும் சட்டென எழுந்து விட்டேன். நுளம்பு ஈர உடுப்பையும் மீறி "சுள் சுள்" என குத்தி யது. நான் காலை உதறி உதறி நின்றிருந்தேன். சில போராளிகள் நுளம்புக் கடியையும் அலட்சியம் செய்துவிட்டு இருந்தார் கள்; படுத்திருந்தார்கள்; பகடி பண்ணினார்கள்.

வந்து 15 நிமிடத்துக்கு மேல் இருக்கும். "இதில் இனியிருந்தால் நுளம்பு தூக்கிக்கொண்டு போய் விடும்" என்று நயமாக கூறிய பொறுப்பாளர், சுணங்கமுடியாது என்று புறப்படச் சொன்னார். அப்பொழுது, ஒரு நடுத் தர வயதுடைய அம்மா, அவித்த சோளங் குலை இருக்கிறது. தருவதற்கு சற்று இருக்குமாறு அன் புடன் கூறினார். பின்னர் அவரேஎமதுநிலைமையைப் புரிந்துகொண்டு சிலருடன் சேர்ந்து வழியில் கொண்டு வைத்தார்கள். ஒரு வயது முதிர்ந்தவர் எமக்கு நடை யில் வைத்து ஒவ்வொன் றாக பகிர்கின்றார். எனது வரிசை அவரை அண்மித்து நான் வேண்டுகின்றபோது, ஊர் ஞாபகத்தில் —"ஐயா புதிர் எடுத்து சாமிக்கு படைத்துவிட்டீர்களா ...?" என்று கேட்டேன். "சாமிக் குத் தந்தாலும் சரி; உங் களுக்கு தந்தாலும் சரி" என்றார். பொக்குவாயால் நிமிர்ந்து சிரித்துக் கொள் கிறார். பெற்றுக்கொண்ட சோளங்குலையை கிறீச் சென்று வாயில் வைத் தேன். அதில் அறுசுவையோ அதிலும் கூடுதலாகவே தெரிந்தது. அவ்விடத்தில் இருந்து இருளோடு இரு ளாக மறைந்தோம்.

மூன்று மைல் வரை கிரவல் பாதையாக இருந் தது. பின்பு வயல் வெளிப் பாதை. தண்ணீரும் சேறும். பள்ளமும் - படு குழியும். யானைகள் பதித்த சுவடுகளுக்குள் கால் வைத் தால் ஒரு அடிக்கு மேல் தாள்கிறது.

நேரம் 11.30மணி ஆகின் றது. பாட்டம் பாட்டமாக மழை பெய்து, உடல் சூட்

டில் சற்று காய்ந்து வரும் உடுப்பையும் மீண்டும் நனைத்து தொல்லைசெய்திற்று. அதுவும்நித்திரைக்கு மருந்து, என்று திருப்திப்படப்போனால் சிலர் நித்திரை தூங்கி விழுந்து எழும்பினர். இதனால் இடைவெளி விடப்பட்டு வியர்க்கின்றவரை ஒட்டமும் நடையும்.

நகர்வு ஆட்டங்காணாமல் இருப்பதற்காக, ஒவ்வொரு சிற்றணிப் பொறுப்பாளர்கட்கும் கடும் உத்தரவு மீண்டும் அறிவிக்கப்பட்டது. அவர்கள்; உலகம் தன்னையும் சுற்றி சூரியனையும் சுற்றுவதற்கு நகர்வதுபோல் செயற்பட்டார்கள். எனக்கு நித்திரையும், பசியும், களைப்பும் சேர்ந்து அப்படியே பேசாமல் படுத்துவிடச் சொன்னது. ஒரு போராளி மயக்கம் போட்டு விழுந்து விட்டார். உடனே அவரை மருத்துவக்குழு அணுகி முதலுதவி செய்து ஸ்டச்சரில் ஏற்றி விட்டது. தாமதம் இல்லை. இரட்டை வரிசையாக பெண் போராளிகள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களது மூன்றாவது நிலை சிற்றணி தான் அது. அதன் பொறுப்பாளர், அணியின் முன் ஆளை உஷார்ப்படுத்துவதற்காக வேகமாக நடந்து போனார். முழங்கால்வரை புதையும் உவர்ச்சகதி இழுத்துப் பிடிக்கிறது. அவர் ரைபிளை சிலிங்கில் போட்டுக்கொண்டு தலையில் ஒரு அரிசி மூடையை ஏற்றி வைத்திருந்தார். ''அந்த மூட்டை இப்போதைக்கு எனக்கு கிடைத்தால்......'' என்று ஒரு கணம் எண்ணியபோது தலை சுற்றுவது போன்று இருந்தது. மறுகணம் 'தபக்'என்று விழுந்தெழும்பினேன். 'திக்' என்றது; கமரா...! கமரா பின்பக்கம் போட்டிருந்ததால் பாதிப்பில்லை. பின்னால் கையை வைத்து எடுத்தேன்.

நடந்துகொண்டு இருக்கின்றோம்; ''சத்தமிடாமல் மெதுவாக காலை வைத்து வரவும்'' என்ற உத்தரவு முன் வரிசை— அஞ்சல் வழியாக வந்தது. சரியாக விளங்காமல் ''என்ன'' என்று காதைக் கொடுத்தேன். கட்டாசியாலையை நோக்கிச் செல்லும் மின்கம்பக் கோபுரம்! இதை ஒவ்வொரு முறையும் இந்த இடத்தில் அவதானிக்கின்ற பொழுது இராணுவத்தைக் காண்கிற பிரமை. கனமான மின் கம்பிகளைத் தாங்கிக் கொண்டு தமிழரின் வயல் வெளியில் உயர்ந்து நிற்பது இருளில் தெரிந்தது. வயல் செய்கைபண்ணி பத்து வருடமாவது இருக்கலாம். இந்தப் போராட்டம் இல்லாவிட்டால், இந்த இடம் சிங்களவரிடம் இருந்திருக்கும். மீண்டும், ஒரு தரம் திரும்பிப்பார்த்தேன். அதுவும் எதிர்த்து நிற்பது போல் பட்டது. இடது பக்கம் ராணுவ முகாம் வெளிச்சம் பிரகாசமாகத் தெரிகிறது.

நாங்கள் கடக்கப் போகின்ற ரயில் பாதையும் பிரதான பாதையும் சுமாரான தூரத்தில் இருந்தது. பாதை நிலைமையை அறிந்துவர, அணி நகர்த்தும் குழு சென்று வரும் வரை அதில் நிற்கவேண்டியதாயிற்று. பொதுவாக கொழும்பு றோட் என்றும் இதனைச் சொல்லிக்கொள்வோம். இதில் பரஸ்பரம் பதுங்கித்தாக்குதல் நிகழ்வதுண்டு. கடைசியாக எமது அதிரடிப்படை அணி (*Commando group*) கொடுத்த நுட்பமான தாக்குதலை அடுத்து, ராணுவம் ரோந்தை முற்றாக நிறுத்தி விட்டது. பாதை கடந்து ஏழு மைல் நடந்திருப்போம். மழைவிட்டு வானம் கழுவி கவிழ்த்ததுபோல் வெளித்துக் காணப்படுகிறது. சகதிகளைக் கடந்து உடைந்த குளக்கட்டில், வந்தபடி வரிசையில் அமர்ந்து கால்களுக்கு சிறிது ஓய்வு கொடுத்தோம். குளத்திற்கு மேற்கில் ஒரு சிறிய குடியிருப்பு பாழ்பட்டுக் கிடந்தது. இந்தக் குடியிருப்பை போன

வருடம் ஒருபாரிய இரா ணுவ நடவடிக்கை மூலம் இராணுவம் வெட்டி அழித் தது. மரங்களெல்லாம் விழுந்து குறுக்கு மறுக்காக கிடக்கிறது. ஒரேயொரு தென்னை மட்டும், மலடு வத்திப்போய் சோகமாகக் காற்றில் அசைகின்றது... இவைகளை எண்ணியபடி பக்கத்தில் இருந்த போரா ளியின் முதுகில் சாய்ந் தேன்... 15 நிமிடம். சட் பட்டென்று தட்டி எழுப் பினார்கள். காலை நிமிர்த்தி எழும்பியபோது ஏற்பட்ட வேதனை, இருக் காமலேயே விட்டிருக்கலாம் என்று ஆகியது.

வேகமான நடை துவங்கிவிட்டது. கால்களில் எல்லாம் தொட்டாமுள் ஏறி, கிறவல் நிலம் மீது கால் பதிக்கவே கூசுகிறது. ஆயினும் ஊன்றி வைக்கா விட்டால் அணியோடு போகமுடியாது. கல்லோடு முள்ஏறிய பகுதி அழுத்தப் படுகின்றபோது உயிர் போய் வந்தது. ஓட்டமும் நடையும் தொடர்ந்தது.

கிழக்கு வெளிக்கின்ற வேளை ஆண்டாங்குளப் பிரதேசத்தில் உள்ள மது ரங்குளத்தை அண்மித் தோம். பில்பில் என்று விடிகின்றது. அதிகாலை 4.30 மணி. அங்குள்ள போராளிகள் பிரதான முகாமிலிருந்துவந்து மது ரங்குளத்து கிராமமக்களு டன் சேர்ந்து, இறைச்சிக் குழம்புடன் சோறும் சமைத்து வைத்துக் கொண்டு காத்திருந்தார் கள். நாங்கள் போன போக்கிலேயே ஒரு தட்டில் நான்கு ஐந்து பேரென்று கூடினோம். நான் சாப் பிடுவதற்கு ஆவென்றேன். சிறிதும் இயலவில்லை. குளிரின் வேகம் இப்போது தான் தெரிந்தது. பசியும் இல்லை. இதைவிட ஒரு படுக்கை கிடைத்தால் அதுதான் சொர்க்கமாக இருந்திருக்கும். அனை வரும் சாப்பிட்டு முடிந்து. ஆண்டாங்குள பிரதான தளத்தை நோக்கி நடந் தோம். ஆறு மைல் நடந்து காலை 8.30 மணிக்கு போய்'' தட்டினோம். அங்கு பெரிய கொட்டில்கள் இருந் தாலும், எங்களின் தொகைக்குப் போதாமல் போயிற்று. பெண் போரா ளிகள் வந்த வரத்திலேயே கொண்டுவந்திருந்த பொலித்தீனால் கொட்டில் அடிக்கின்றார்கள். சமையல் வேலையும் நடக்கிறது. நான் எங்கள் கொட்டி லைப் பார்த்தேன். தொங் கல்வரை குறுக்கும் மறுக்கு மாக போராளிகள் கிடந் தார்கள். எனது கமராப் பையைக் கழற்றி அருகில் வைத்துவிட்டு, ஒருவர் மீது தலையை வைத்து சரிந் தேன். அவ்வளவுதான் தெரியும்.

அன்று பிற்பகல் 4.00 மணிக்கு எல்லைப்புறத்தை நோக்கி மீண்டும் ஆரம்ப மான நகர்வு, நள்ளிரவு 12.30 வரை நீடித்தது. அடர்ந்த காட்டுப்பாதை யில் 16 மைல்வரை நடந்து தாக்குதல் நிலையை அடைந்தோம்.

சிறிலங்கா — தமிழீழ எல்லை வீதி. தாக்குதல் திட்டத்திற்கு ஏற்ப, தாக்கு தல் தளப்பொறுப்பாளரால் கட்டளையிடப்பட்டு, நிலை யெடுத்துக் காத்திருக் கிறோம்.

காலை 7.30 மணி. கவசவாகனம் 'ம் ம்...'' என்று உறுமிக்கொண்டு புறப்படும் சத்தம் கேட் டது. கழுத்தில் தொங்கிய கமராவை எடுத்து மேலும் ஒரு சொட் 'சடக்' என்று —அடித்து உறுதி செய்து கொண்டேன். வலது பக் கத்தில் ஒரு 15 வயதுடைய போராளி RPG உடன் தயாராகிறான்.

இராணுவத்தினர் ''தெமல கொட்டி...'' என்று தொடங்கி, சொல்ல முடியாத வார்த்தைகளைப் பேசி பயத்தை வெளியிட் டுக் கொண்டு, நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

''பட பட'' வென்று எமது தாக்குதல் கடுமை யாகத் தொடக்கப்பட்ட போது, கவசவாகனம் உன் னுகிற மூச்சுக்கு RPG ஏவப் படுகிறது. அது நிற்க; மற் றொரு கவசவாகனம்

முன்னேற, அதற்கும் அடுத்த RPG ஏவப்பட்டு கவசவாகனம் நிறுத்தப் பட்டதும்இராணுவம் எமது கொலை வலயத்துக்குள் சிக்கி, திக்குத் திசை மாறி யது. இருவர் புழுதி அடித்த யானை மாதிரி எங்கள் முன்பாக ஓடி வந்து, எங் களைக் கண்டதும் துப்பாக் கியை நீட்டுகின்றனர். அப் பொழுது இங்கிருந்து ஒரு பெண் போராளி இலகு இயந்திரத் துப்பாக்கியால் சரமாரி பொழிந்தார். அவர்கள் சரிகின்றனர். நான் படமாக்கினேன்.

தாக்குதல் முடிந்து கைப்பற்றிய ராணுவப் பொருள்களையும், விழுப் புண் அடைந்த நான்கு போராளிகளையும், வீர மரணம் அடைந்த ஒரு போராளியையும் 'ஸ்ரச் சரில்' ஏற்றிக்கொண்டு எல்லையிலிருந்து திரும் பினோம்.

□ □ □

க. பிரமதீஸ்வரி

எழுதிய

## வீழ்த்திட வந்தாச்சு

வரிப்புலி மறவர் கூட்டத்துத் தலைவர்
எங்களின் உயிர் மூச்சு - அவர்
வளர்த்திட்ட சேனை செருக்களம் ஆட
எதிரி நிலை போச்சு.

நீண்ட காலமாய் ஈழத் தமிழினம்
அடங்கி வாழ்ந்தாச்சு - இன்று
வேங்கைத் தலைவரின் தலைமையில் எதிரியை
வீழ்த்தீட வந்தாச்சு.

பேச்சுப் பேச்சென்று காலங் காலமாய்ப்
புலம்பிக் கெட்டாச்சு - இன்று
போர்வல்ல தலைவரின் தலைமையில் தமிழினம்
பொங்கி எழுந்தாச்சு.

எங்கள் தானையின் தீரச் செயல்களை
உலகம் வியந்தாச்சு - இனிய
ஈழம் மலர்ந்திடும் நாள்வர நாளின்னும்
கொஞ்சமே உளதாச்சு.



சாந்தி

எழுதிய

# பிஞ்சுகள் சுமந்த பெருஞ்சுமை

மணலாறு காட்டுப்பகுதியில் அமைந்துள்ள முகாம் ஒன்றில் 25-07-93 அன்று மருத்துவக் குழுவினராகிய நாம் தாக்குதல் ஒன்றிற்கு எம்மை தயார் படுத்திய நிலையில் காத்திருக்கின்றோம். கிட்டத்தட்ட நேரம் காலை பத்து மணியிருக்கும். மருத்துவ சேவையின் முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக நாம் அயலிலுள்ள கிராமத்திற்குச் சென்று சில ஆயத்தங்கள் செய்ய வேண்டும். அதற்கு வெளிக்கிட்டு நிற்குமாறு அறிவித்தல் வந்தது. இதற்காக நானும் மருத்துவப் போராளிகளுமாகமொத்தம் பதினொருபேர் எமது பயணத்தை ஆரம்பித்து பிற்பகல் ஒரு மணிக்கு அக்கிராமத்தை வந்தடைந்தோம். அங்கு எமது தேவையின் சில முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டு அத்துடன் சில விசேட ஆயத்தங்களையும் செய்யத் தொடங்கினோம். அதே நேரத்தில் அவ்விடத்திற்கு மாணவரமைப்பு உறுப்பினர்கள் சிலரும் அத்துடன் உதவியாளர்கள் கொஞ்சப் பேரும், மருத்துவ சேவையின் போது தேவைப்படும் உதவிக்காக ஒன்றுதிரட்டப்பட்டு, கொண்டு வரப்பட்டிருந்தனர். எமது முன் ஆயத்தங்கள் அனைத்தும் அன்று இரவு ஒன்பது மணியளவில் முடிவடைந்ததும், நாமும் எமக்கு உதவிக்காக வந்திருந்த அனைவருமாக எமது கடைசி நிலை மருத்துவ முகாமுக்குச் சென்றோம். அங்கு சென்றதும் மிகச் சுறுசுறுப்பாக வேலைகள் தொடங்கின. அனைவரும் ஒன்று சேர்ந்து வீட்டில் உள்ள சாமான்களை ஒதுக்கி, துப்புரவு பண்ணி, எமது மருத்துவப் பொருட்களை எடுப்பதற்கு வசதியாக வரிசைக் கிரமத்தில் ஒழுங்கு படுத்தி அடுக்கினோம். அதற்கிடையில் வெளிச்ச வசதி செய்யப்பட்டது. வீடு துப்புரவாக்கப்பட்டதும் பாய்கள் விரிக்கப்பட்டு தலையணைகள் போடப்பட்டன. நோய் நிவாரணிகள், உயிர்காக்கும் மருந்துகள் ஒரு மூலையிலும் 'சேலைன்', 'குளுக்கோஸ்' போன்றன இன்னுமொரு மூலையிலும் வைக்கப்பட்டு பின்பு அவை அனைத்தும் சகல மருத்துவப் போராளிகளுக்கு மட்டுமல்ல, அங்கு வந்திருந்த மாணவர்கள் சிலருக்கும் சொல்லிக் கொடுக்கப்பட்டன. இது காயமடைந்து வருபவர்களுக்கு சிகிச்சையை தாமதமின்றிச் செய்ய வழிவகுக்கும். இவ்வாறு சொல்லிக் கொடுக்கும்போது அதில் மாணவர்கள்

சிலர் காட்டிய ஆர்வம் போராளிகளின் உயிரைக் காப்பாற்றுவதில் அவர்கள் கொண்டிருந்த அதிதீவிரத்தை எடுத்துக் காட்டியது. இது மனதில் இனம்தெரியாத ஒரு சந்தோஷ உணர்வை ஏற்படுத்தியது. இதிலும் குறிப்பாக இரு சிறுவர்கள். அவர்களின் பால் வடியும் முகம். கொழுகொழு வென்ற கன்னங்கள். உருண்டை விழிகள், மழலைச் சிரிப்பு -அத்தனையும் அவர்களுக்கு வயது ஒன்பது – பத்தைத் தாண்டியிராது என்று எடுத்துச் சொல்லியது. மேலும் அவர்கள் போட்டிருந்த சாரணர் உடை அவர்களை மேலும் எடுத்துக் காட்டியது. அவர்கள் இருவரும் மிக சுறுசுறுப்பாக செயற்பட்டார்கள். இத்தனைக்கும் அன்று வீட்டில் பெற்றோர்களுக்கு எங்கு போகின்றோம் எனச் சொல்லாமல்வந்தவர்கள்தான் அவர்கள். இருந்தும் 'அம்மாவுக்குச் சொல்லாமல் வந்திட்டேனே; தேடுவாவோ' என்ற பதற்றமோ - அந்தரமோ இன்றி சாதாரணமாகச் செயல்பட்டார்கள். அத்துடன் தாக்குதல் தொடங்கினால் நாம் நிற்கும் இடத்திற்கு சில வேளைகளில் 'ஷெல்' வரலாம்; கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல் நடத்தலாம்; ஏன் வானில் இருந்துகூட தாக்குதல் நடத்தலாம். ஆனால் அவர்கள் எதுவித பயமோ, கவலையோ இன்றி சிரித்த முகத்துடன் மிக உற்சாகமாக வேலைகளைச் செய்துகொண்டிருந்தார்கள்.

நான் சிறிது ஓய்வு எடுப்பம் என்று நினைத்து, அவ்வீட்டின் முற்றத்திலுள்ள மாமரத்தின் கீழ் இருந்த ஒரு கட்டிலில் வந்து அமர்ந்தாலும், எனது கண்கள் அவ்விருவரையுமே பார்த்துக்கொண்டிருந்தன. அப்போது 'இளம் கன்று பயம் அறியாது, என்பது எவ்வளவு உண்மை என்பதைப் புரிந்தேன். அவர்கள், வரிசையாக விரிக்கப்பட்ட பாய்களுக்குத் தலையணைகள் சரிசெய்து போட்டார்கள். வீட்டினைதிரும்பத்திரும்பக்கூட்டினார்கள். பஞ்சு உருட்டினார்கள். என்னவெல்லாம் தங்களால் செய்ய இயலுமோ அதையெல்லாம் செய்து கொண்டிருந்தார்கள்.

இப்ப நேரம் இரவு 12-05. தாக்குதல் சத்தங்கள் கேட்கத் தொடங்கி விட்டது. நாம் வழமையை விட கொஞ்சம் உசாரானோம். அவர்களும் எங்களுடன் சேர்ந்து செயற்பட்டார்கள். இறுதியாக சகல ஒழுங்கமைப்பும் சரிபார்க்கப்பட்டு விட்டது. அது திருப்திகரமாக இருந்தது. இனிக் காயக்காரர் வர இரண்டு மணித்தியாலங்கள் என்றாலும் எடுக்கும். எல்லோரும் கொஞ்ச நேரம் படுத்தால் நல்லது என்று நினைத்து ''பிள்ளையள் 'சென்றி' ஒன்றை விட்டிட்டு எல்லோரும் படுங்கோ; நானும் படுக்கப் போறன். 'கேஸ்' வர எழும்புவம்'' என்றேன். அநாவசியமாக 'லைற்' எரிவது சிலவேளை வான் தாக்குதலுக்கு வழி செய்து கொடுக்கும் என்பதால் 'ஜெனறேற்றரை' நிற்பாட்டி விட்டு, 'பெற்றோமாக்ஸ்' ஒன்று கொளுத்தி வைக்கப்பட்டது. ஒரு பெண் போராளி சென்றியில் நின்றார். நான் முற்றத்து மாமரத்தின் கீழ் உள்ள கட்டிலில் படுக்க எத்தனித்த போது பார்த்தால், அவர்கள் இருவரும் இன்னமும் ஓயவில்லை. உடனே அவர்களை என்னருகில் கூப்பிட்டு, ''அப்பன் நீங்க இரண்டு பேரும் கொஞ்ச நேரம் படுத்தால்தான் காயக்காரர் வர உசாராக வேலை செய்யலாம். ஒரு பாய் எடுத்து வந்து, இப்படி அன்ரியின்ரை கட்டிலுக்குக் கிட்ட போட்டிட்டுப் படுங்கோ; 'கேஸ்' வந்ததும் அன்ரி உங்களை எழுப்புறன்'' என்றேன். ஆனால் அவர்கள் அதற்கு உடன்படவில்லை. ''வேண்டாம் அன்ரி, நீங்கள் படுங்கோ; நாங்கள் இப்படி இருக்கிறம்'' என்று கூறி; கட்டில் கால் மாட்டில் இருவரும் இருந்து விட்டார்கள். என் நெஞ்சில் ஒரு திகைப்பு. இப்படி ஒரு தீவிரமா? இது எப்படி எங்கிருந்து வந்தது? நிச்சயமாக எமது மண்ணிலிருந்து வந்தது தான், என நினைத்து விட்டு ''சரி தம்பி

யவை எஙீனால ஏலாது; நான் படுக்கிறன்'' என்று சொல்லிப் படுக்கவும், ''அன்ரி நீங்கள் படுங்கோ, காயக்காரர் வர நாங்கள் உங்களை எழுப்புறெம்'' என்றார்கள். இது எப்படியிருக்கு? நான் சொன்னதையே எனக்குத்திருப்பிச் சொல்லி விட்டார்கள்.

இன்று இவர்கள் வீட்டில் இருந்திருந்தால் இப்போது இவர்களுக்கு சாமம். ஆனால் காலத்தின் தேவையை உணர்ந்த படியால் எங்களுக்கு மட்டுமல்ல அவர்களுக்கும் இன்று பகல். இதற்கிடையில் இருவரும் எழுந்து சென்று விறாந்தையில் கொளுத்தி வைத்திருந்த 'பெற்றோ மாக்ஸ்'க்கு காற்று அடித்து விட்டு வந்திருந்தார்கள். நான் சற்று அயர்ந்து விட்டேன். திடுக்குற்று கண் விழித்துப் பார்த்தால் நேரம் அதிகாலை 1.35. கண்ணைக் கசக்கி விட்டு, எனக்கு அருகில் இருந்த இரு குழந்தைகளையும் பார்த்தால் காண வில்லை. எழுந்து ஒருசில அடி வைத்துத் தேடிப்பார்த்தால் என்ன அதிசயம், வீட்டு விறாந்தையில் வைத்திருந்த 'பெற்றோ மாக்ஸ்'க்கு மிக அருகில்- அதன் இருபக்கங்களிலும் தலையணையோ அன்றி பாயோ எதுவுமின்றி ஆழ்ந்த நித்திரையிலிருந்தார்கள். கடவுளே கொஞ்சம் அசைந்திருந்தால், இருவருக்கும் எரிகாயம் தான். நான் ஓடிச் சென்று 'பெற்றோ மாக்ஸை' அவர்களுக்கிடையிலிருந்து மெதுவாகத் தூக்கி சற்றுத் தொலைவில் வைத்துவிட்டு, அவர்களையே பார்த்துக்கொண்டு நின்றேன். அங்கு அவர்களின் மனத் தீவிரத்தை, உறுதியை, அவர்களின் உடல் நிலை வென்று, தனது அந்த நேரத்துக் கடமையைச் செய்து கொண்டிருந்தது. ஒன்று மட்டும் எனக்குப்புரிந்தது. அவர்கள், படுக்கக்கூடாது என்று முடிவுகட்டி உறுதியாக இருந்திருக்கிறார்கள். ஆனால் தங்களை அறியாமலேயே நித்திரையாகி விட்டார்கள் என்பதை, அவர்கள் படுத்திருந்த கோலம் எடுத்துக் காட்டியது.

அதன் பிறகு எனக்கு நித்திரை வர மறுத்தது. ஒவ்வொரு வினாடியும் காயமடையும் போராளிகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

அதிகாலை இரண்டு மணியளவில் காயமடைந்தவர்கள் வரத்தொடங்கி விட்டார்கள். முதலில் நான்கு காயக்காரர்கள் கொண்டுவரப்பட்டார்கள். பிறகு என்ன, எமது உயிர்காக்கும் பணி தொடர்ந்துகொண்டேயிருந்தது. அதில் இவர்கள் செய்த பணி அப்பப்பா! காயமடைந்தபோராளிகளுக்குத்தலையணையை அணைத்து வைத்தார்கள். அவர்களை வாகனத்திலிருந்து இறக்க - ஏற்ற உதவினார்கள். சேலைன், குளுக்கோஸ் ஏறிக் கொண்டிருக்கும்போது அதைத் தாங்கிப் பிடித்தார்கள். காயத்துக்கு மருந்து கட்டும் போது 'ரோச்' பிடித்தார்கள். இவைஎல்லாவற்றிற்கும்மேலாக, காயமடைந்த போராளிகளுக்கு அருகில் அமர்ந்திருந்து பரிவாக, ஆறுதலாக விசிக்கிக் கொண்டிருந்ததுதான், இன்றும் என் கண்ணில் நிற்கின்றது. நிச்சயமாக இச்செயல், அன்று உடலால் வேதனைப்பட்ட எம்போராளிகளுக்கு உளவேதனையைப் போக்கும் ஒரு மருந்தாக இருந்திருக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. அன்று அவர்களுக்கு நித்திரையில்லை; ஓய்வும்இல்லை. அத்துடன் தங்கள் வயதிற்குமேலாக வேலை செய்திருக்கிறார்கள். இருந்தும் அடுத்த நாள் பகல் பார்த்தபோது அவர்கள் முகத்தில் சோர்வோ அன்றிக் களைப்போ தெரியவில்லை. இது, காலத்தின் தேவையை உணர்த்த அவர்களின் மனநிலையை எடுத்துக் காட்டியது: மண்ணில்- போராளிகளில் கொண்ட தீராத பற்றை எடுத்துக் காட்டியது. இவ்வாறு பூக்களும் பிஞ்சுகளும் மண்ணை நேசிக்கும்போது நிச்சயம் விடுதலை மிக மிக விரைவில்தான். ▢

வவுனியா - திலீபன்
எழுதிய




## எரிந்துபோன என் நகரம்

சருகுகளின்
சத்தமும்
காற்றின்
முத்தமும்
எரிந்துபோன
என் நகரத்தை
ஞாபகிக்க வைக்கும்!

இப்போதெல்லாம்
அங்கு-
என் கால்கள்
படுவதில்லை.

என் சுவாசம்
அங்கு-
நிகழ்வதில்லை.

ஆனாலும்
என்ன?

அந்த-
நகரத்தை
இப்போதும்
நான் நேசிக்கிறேன்!
அங்குள்ள
ஒவ்வொரு புதிகளுக்கும்
என் புன்னகை தெரியும்.

அங்கு
மரணமடையாத
மரங்களுக்கு
என் மௌனம்
புரியும்!

அங்குள்ள
வயல்வெளிக்கு
என் வியர்வை
நாற்றம்
பரிச்சயம்!

அங்குள்ள
மதில்கள்
என் கால்களின்
உஷ்ணம் உணரும்!

முற்றவெளிக்குத்
தெரியும்
என் முகவரி!

ரத்தம், எலும்பு,
சாம்பல்
இவைகள்
என் நகரத்தில்
விளைவதாய்

எனக்குக் கனவு வரும்!
அதிகாலை வரை
கனவு நீளும்!

அங்கிருந்து
வரும்
மனிதனிடம்
என்
நகரத்தின்
இன்றைய வடிவத்தை
கேட்டறிய முடியாது.

வருபவன்
முகமிழந்து,
விழியிழந்து-
ஊமையாகி
சீச்சீ...

என்னை
உரசிவிட்டுச்
செல்லும்
காற்றே
நீ சொல்!

என் நகரம்
நகரமாகவா
இருக்கிறது?

அங்குள்ள
கொடிகள்
மொட்டுக்கள்
அவிழ்ப்பதுண்டா?

இப்போதும்
என் நகரத்தை
நான் நேசிக்கிறேன்!

என் நேசப்பறவைகள்
பாடித்திரிந்த
வானத்தில்
குண்டு சுமந்த
கழுகுகள்
என் இனத்தை அழிக்கப்
பயிற்சி எடுக்கும்!

எதிரி-
என் இனத்தவனின்
ரத்தத்தில்
நீச்சல் பழகிக்கொண்டிருக்கிறான்!

அந்த
இருண்ட நகரில்
என்னால்
இருப்புக்கொள்ள முடியவில்லை.

என்-
நகரில் புதிய சூரியனின்
கதிர்கள்
விழவேண்டும்!
எதிரி
எம்மைக் கண்டு
தொழவேண்டும்!

உணர்வு கொண்டு
எல்லோரும்
எழவேண்டும்!

பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. கோழைத்தனத்தின் தோழன். உறுதிக்கு எதிரி. மனிதபயங்களுக்கு எல்லாம் மூலமானது மரணபயம். இந்த மரண பயத்தைக் கொன்றுவிடுபவன்தான் தன்னை வென்றுவிடுகிறான். அவன் தான் தனது மனச்சிறையிலிருந்து விடுதலைபெறுகிறான்.

—தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்.




சுதாமதி

எழுதிய

**விடியும்**

நாய்களின் பெருஞ்சத்தமான குரைப்புக்கள் தொடர அவர்கள் வழமையாக வந்துபோவார்கள். அந்நேரம் மட்டக்களப்பின் ஒவ்வொரு மூலையையும் பயத்தால் விழிபிதுங்கிக் கிடக்கும். தங்கச்சி ஓடிவந்து, பயத்துடன் அம்மாவோடு ஒட்டிக்கொள்வாள். அவர்களை மருட்சியோடு பார்ப்பாள். அம்மாமட்டும் அதே வெறித்தபார்வையோடும் சோகம் அப்பிய முகத்தோடும் வருவது வரட்டும் என்ற அசட்டுத் துணிவில் நிற்பாள். அவர்களைப்பார்க்க அருவருப்பாக இருக்கும். அவர்களது கரகரப்பான குரலும் மொழிபுரியாத பாசையும் அம்மாவை மருளச்செய்யும்.

கனத்த சப்பாத்துக் காலடிகளின் பதிவோடு இன்னும் அவர்கள் வழமைபோல வந்தார்கள். முற்றத்திற் படுத்திருந்த மெலிந்துபோன - சீவனற்ற கிழட்டு நாயை காலால் உதைத்தார்கள். அது வலி தாளாது அலறலோடு சுருண்டு விழ பெரிதாகச் சிரித்தார்கள்.

அம்மாவுக்கு நெஞ்சு படபடத்தது. தங்கச்சி, அம்மாவின் சேலைத் தலைப்பை விடாது பற்றிக் கொண்டாள். அவர்களது உரத்த அதட்டலான குரல், அம்மாவுக்குப் பயத்தை ஊட்டியது. அவர்கள் அம்மாவிடம் ஏதோ கேட்டனர். அம்மா மலங்க மலங்க விழித்தாள். அவர்களோடு வந்த 'எங்களில் ஒன்று' அதை மொழி பெயர்த்தது.

''நீ போனகிழமை மகனைப் பார்க்க யாழ்ப்பாணம் போனியாம்; உண்மைதானே''

''இல்லை ஐயோ, நான் கொழும்புக்குத்தான் போனனான்'' - அம்மாவுக்கு நாக்குழறியது. வார்த்தைகள் தடுமாறின.

''அப்ப, என்ன பலகாரம் செய்துகொண்டு போன மாதிரிக் கிடந்துது. எங்களுக்கென்ன காது குத்துறியோ?''

மரியாதையிழந்த அவனது வார்த்தைகளைக் கேட்க அம்மாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இயலாமையோடு மனதுக்குள் திட்டித்தீர்த்தாள்.

''இஞ்சை எங்கடை கட்டுப்பாட்டுக்குள்ளை இருந்து கொண்டு, எங்களுக்கு வாலாட்ட நினைக்காதையுங்கோ; தெரியுமே. யாழ்ப்பாணம்...... பெடியளைப் பார்க்கப்

போறது; அப்பிடி இப்பிடி யெண்டு கேள்விப்பட்டமோ, கொளுத்திப்போடுவம்; கவனம்'' உறுமிக் கொண்டு போனார்கள். அம்மாவின் கால்கள் படபடத்தன. அவளது சொர சொரத்த உதடுகள் ஒரு முறை ஆத்திரத்தோடு மடிந்தன. ''எப்பதான் நாங்க நிம்மதியா இருக்கப் போறமோ?'' அம்மாவின் வாய் ஏக்கத்தோடு முணு முணுத்தது. தங்கச்சி அம்மாவைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

''நாங்கள் எங்கை யாவது போய்விடுவமே அம்மா!'' - அவளது பிஞ்சு விழிகளில் ஈரம் பனித்தது. அம்மாவுக்கு தாங்கமுடியாமல் இருந்தது. அம்மா அவளை அணைத்து ஆறுதல்படுத்தினாள்.

''எங்கடை வீடு,காணி இதைவீட்டிட்டு எங்கை மகள் போறது?''

''முந்திக் கலவரத்துக்கு காட்டுக்குள்ளை போய் இருந்தமே; அப்படிப் போய் இருப்பமே?'' அவளது வேதனையான வார்த்தைகளால் அம்மா தவித்துப் போனாள். அவளைக் கட்டிக்கொண்டு ஆறுதல் படுத்தினாள்.

''கொஞ்சக் காலத்திலை இஞ்சையிருக்கிற ஆமியையெல்லாம் பெடியள் துரத்திப் போடுவாங்கள். அப்ப நாம நிம்மதியா இருக்கலாம்'' - அம்மாவின் வார்த்தைகள் நம்பிக்கையோடு வெளிப்பட்டன.

''அம்மா... அண்ணையைப் பார்க்கப் போவமே'' தங்கச்சியின் கலங்கிய விழிகள் அம்மாவிடம் கெஞ்சின.

''என்னண்டு போறது? இப்பதான் அவங்கள் இதுக்காக வந்திட்டுப் போறாங்கள். இதை அறிஞ்சாங்கள் எண்டால்.....'' அம்மாவிடமிருந்து நீண்டதொரு பெருமூச்சு வெளிப்பட்டுத் தேய்ந்தது.

வாசீசனை நினைக்கும் போது அம்மாவை ஒரு கணம் ஏக்கம் தழுவிக் கொள்ளும். மறுகணம் நீண்டதொரு நிம்மதிப் பெருமூச்சு எழும். ''அவன் இஞ்சையிருந்தால் இந் நேரம் வாவியிலை மிதந்திருப்பானோ, தகப்பனை மாதிரி...''அம்மா கற்பனை செய்துபார்த்து, மனதைத் திருப்திப்படுத்திக்கொள்வாள். 'நாட்டுக்காக...' என்ற திருப்தி மனதில் நிறையும். அவனை நினைக்கும்போது, அம்மாவுக்குப் பெருமையாக இருக்கும்.

'என்ன பிள்ளை அவள்' அவனை ஒரு போதும் அதட்டி எச்சரித்ததாக அம்மாவுக்கு ஞாபகம் இல்லை. அவன் இருக்கும்போது, தனக்கொரு வளர்ந்த பொம்பிளைப் பிள்ளை இல்லையே என்ற கவலைகூட அம்மாவுக்கு ஏற்பட்டதில்லை.

வயலுக்குப்போய்......, பள்ளிக்கூடத்தில் ஒழுங்காகப் படித்து... வீட்டுவேலைகளில் உதவிசெய்து...

அவன் போய்விட்டது- அம்மாவுக்கு தனது வேலைகளில் ஒருகையை இழந்ததுபோல... என்றாலும் அவனை நினைக்கும்போது அம்மாவின் மனது நிறைகிறது.

அது ஒரு மம்மலான பகற்பொழுது. அன்று அம்மாவுக்கு நிறைய வேலைகள் இருந்தன. அன்றைக்கு வந்த தபாலில் அவனுக்கு மேல்படிப்புக்கான வெளிநாட்டுப் புலமைப்பரிசில் அனுமதி கிடைத்தபோது... அம்மா இயல்பாக, எல்லாத் தாய்மாரும் அடைகின்ற சந்தோஷம் அடைந்த போது-அவன்மட்டும்எப்படி நின்றான்.

''அம்மா நான் ஒரு நாளும் போகமாட்டன். உங்களையும் தங்கச்சியையும் விட்டிட்டு, அதுக்கும் மேலாக இந்தமண்ணையும் விட்டிட்டு நான் போகமாட்டன்'' - சின்னமாமி

எடுத்துச்சொன்ன போதும் அவன் கேட்கவேயில்லை, அம்மா, நீண்டு வளர்ந்து விட்ட தன்மகனைப் பெரு மையோடு பார்த்தாள். அப்பாமட்டும் அம்மாவைப் பார்த்து ''நீ வளர்த்த வளர்ப்பு'' என்று திட்டிய போதும் அவன் மசிவேயில்லை.

அதற்குப்பிறகு திடீரென ஏற்பட்ட சுற்றிவளைப்புக்களில் வாகீசனை ஒருவாறு ஓடித்தப்பச் செய்து, காட்டுக்கு அனுப்பி வீட்டு அப்பா நின்றபோது வேலிபிரித்து அவர்கள் வந்தார்கள். அம்மாவும் தங்கச்சியும் வீரிட்டுக்கத்த அப்பாவை இழுத்துச்சென்றார்கள். அம்மா குறுக்கே விழுந்து கதறியழுதபோது அம்மாவை தெட்டித்தள்ளி விட்டு ..

அடுத்தநாள் நெற்றியில் சூட்டுக்காயத்தோடு உப்பிப் பருத்துப்போனஅப்பாவின் உடலைக் கொண்டுவந்தார்கள். அம்மாவுக்கு வெள்ளைப் புடைவையும் வெறுமையான நெற்றியும் சொந்தமாயின. வாழ்வின் தேக்கத்தால் குழிவிழுந்து போன கண்களுடன் அவள் தினமும் கோயிலுக்குச் சென்றாள். அம்மா தன்னிடம் எஞ்சியிருக்கும் தன் மகளினதும் மகனினதும் உயிர்களுக்காக விரதங்கள் இருக்கத்தொடங்கினாள்.

அதன்பின்னர் வாகீசன் மாறிப்போனான். நீண்ட நேரங்களைத் தனிமையிற் கழித்தான். இரவில் நெடுநேரங்கடந்தபின்னர் வீட்டுக்கு வந்தான்.

அதற்கடுத்தகாலங்களில் சுற்றிவளைப்புக்கள் அடிக்கடி நிகழ்ந்தன. மட்டக்களப்பு வாவியில் உப்பிய மனித உடல்கள் மிதந்து வந்தன. வீடுகள் தோறும் அழுகுரல்கள் கேட்டன.

அமாவாசைக்கு முந்திய ஒரு இரவில் அம்மாவின் மகன் காணாமற் போனான். அவனோடு அந்த ஊரின் நாலைந்து பேரும் காணாமற்போனார்கள்,

''அவங்கள் இயக்கத்துக்குப் போட்டாங்கள்'' காதோடு காதாக அந்த ஊரிலுள்ளவர்கள் பேசிக் கொண்டார்கள்.

அம்மா காலத்தின் தேவையை அறிந்துகொள்கின்ற சூழ்நிலையில் அவர்கள் காணாமற்போனார்கள். அம்மா அவன் இல்லாத வெறுமையை உணரத்தொடங்கினாள். ஆர்ப்பாட்டம் இல்லாமல் அழுதாள். கோயிலுக்குப் போவதை நிறுத்திக்கொண்டாள். சுவாமி விரதங்கள் எதுவிலும் நம்பிக்கையற்றவள்போல மாறிக்கொண்டாள். இரவு வேளைகளில் அரவமில்லாது வரும் மண்ணின் குழந்தைகளில் தன் மகனைக் கண்டாள். அவர்களை உபசரிப்பதும்; சத்தமில்லாது அனுப்பிவைப்பதும்; அவர்களுக்காகப் பிரார்த்திப்பதுமே அவளது கடமைகளாகிவிட்டன.

இப்போது அம்மா மாறித்தான் போனாள். அதிகமாகப் பயப்படுவதைத்தவிர்த்தாள். இயன்றவரை மனதைத்திடப்படுத்திக்கொண்டாள். அப்பாவின் படத்திற்குமுன்னால் நின்று அழுவதை நிறுத்திக்கொண்டாள்.

''அம்மா...''

மகளின் குரல்கேட்டு அம்மா ஏறிட்டுப்பார்த்தாள்.

''என்னை, அண்ணையிட்டைக் கூட்டிக்கொண்டு போங்கோ'' - அவளதுபிடிவாதம் வழமையைவிட இன்று கூடுதலாக இருந்தது.

''என்னெண்டு போறது. அவங்கள் அறிஞ்சாங்கள் எண்டால் என்ன நடக்குமோ தெரியாது. இஞ்சை இருக்கவே விடமாட்டாங்கள் மகள்.''

''இல்லை நாங்கள் எப்பிடியாவது போக

ணும். போகாட்டி நான் சாப்பிடமாட்டன்'' - அந்தப்பிஞ்சுமுகத்தில் பிடிவாதம் நிறைந்திருந்தது. அவள் எப்பவுமே அப்படித்தான். அண்ணனினதும் அப்பாவினதும் மிகுந்த பாசம் அவளை பிடிவாதக்காரியாக மாற்றிவிட்டிருந்தது.

அம்மாவுக்குக் கவலையாகஇருந்ததுஅண்ணாவின் முகத்தை வருடக்கணக்காக காணாத ஏக்கம் முகத்தில் தெரிந்தது. 'போகத்தான் வேணும். என்ன பாடுபட்டாவது ...... இந்த நரக வாழ்க்கையை எத்தனை நாளைக்கு தாங்கிக்கொள்வது?' - அம்மா தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள். வாய்விட்டுச் சொல்லமுடியாத துயரங்களாக தன்னுள்ளே தேக்கிக் கொண்டாள்.

''வெளிக்கிட்டுப் போகுமட்டும் அவங்கள் வரக்கூடாது'' - அம்மா கடவுளிடம் வேண்டினாள். அவளது சின்னமகளுக்கு ஒரே புளுகமாக இருந்தது. அவள் தமையனுக்கு என்று ஒவ்வொன்றையும் எடுத்து வைத்தாள். என்றுமில்லாத ஆர்ப்பாட்டமான சந்தோஷத்தோடு அவள் இருந்தாள். அம்மாவின் மனம் மட்டும் நிலைகொள்ளாமல் தவித்தது. நாய்களின் சிறுகுரைப்புக்கும் அஞ்சினாள். வேலிகளில் சிறு சரசரப்புக் கேட்டபோதெல்லாம் வெளியில் வந்து எட்டிப்பார்த்தாள். கடைசியில் வருவது வரட்டும் என்ற துணிவோடு புறப்பட ஆயத்தமானபோது தான் அது நிகழ்ந்தது.

மோப்பம் பிடித்துவரும் நாய்களாக அவர்கள் வந்தார்கள், அம்மாவின் சின்னமகள் கதறக் கதற அம்மாவை இழுத்துவந்து அடித்தார்கள். அம்மாவின் நலிந்த உடல் மயங்கிச் சரிந்தபோது, சின்னமகளை அதட்டி வெருட்டிவிட்டுச் சென்றார்கள்.

அன்றிரவு அம்மாவைப்பார்ப்பதற்காக அந்த மண்ணின் குழந்தைகள் வந்தார்கள். அம்மா வழமைபோல அவர்களை உபசரித்தாள். தன் சின்னமகளை ஆதங்கத்தோடுதடவிக்கொடுத்தாள். அந்த மண்ணின் குழந்தைகளோடு அவளை அனுப்பிவைத்தாள். அவளது கண்கள் என்றுமில்லாத ஒளியோடு பிரகாசித்தன- அவர்கள் சென்ற வழியையே அவை பார்த்துக் கொண்டிருந்தன. ☐☐


காற்றிலும் இசை
கடலிலும் இசை
கேட்கும் ஒலியிலெல்லாம் இசை
மனதுக்கு இதந்தருவதும் இசை
நல்ல பாடல்களுக்கு 'சிற்றிஷன்' மியூசிக்

விரும்பிய பாடல்களை தரமாக ஒலிப்பதிவுசெய்ய

சிற்றிஷன் மியூசிக்

CITIZEN MUSIC

பலாலி வீதி, கல்வியங்காடு.

☐ நாக. பத்மநாதன் எழுதிய

## மனக்கிருமி

மறைந்து மறைந்து ஒரு பெருந்தீமை ஓடிக் கொண்டிருக்கும்; அதன் தாக்கத்தால் அடிபடும் அவல உயிர்களின் குரல்கள் கேட்கும்; அதற்கு மேலாக அந்தக் கொடுமையின் கனைப்பும் இடையிடையே காதுக்கு எட்டும். ஏதோ பாழ்போல இது ஆகி வருகிறதா?

ஆய்வின் துணை கொண்டு இதனை மடக்கிப் பிடிக்க முனைந்தபோது, ஒரு விரியன் பாம்பின் உடல் வெளிக்கு வந்தது.

''நீ எத்தனை பேரைக் கொன்றாய்?''

''நான் ஒருவனைத் தீண்டி முடிக்க, மற்றையோர் கண்டு என்னை அடித்து முடித்துவிட்டார்கள்'' என்றது பாம்பு.

''சரி, நீ போகலாம்'' என்றேன்.

அடுத்த தேடலில் நீண்ட கொளுக்கிப்புழு ஒன்று அகப்பட்டது.

''நீ குழந்தையின் குடலில் நுழைந்திருந்து அதனை மெல்லெனக் கொல்ல முனைந்தாயல்லவா?'' எனக் கேட்டேன்.


''ஆனால் அவர்கள் மருந்தைக் கொடுத்து என்னை விரட்டி வெளியேற்றி விட்டார்களே!'' என இரங்கிற்று அது.

''சரி நீயும் போகலாம்'' என்றேன்.

நடுவயதுத் தந்தை ஒருவன் இளைத்து இளைத்து எலும்பாகிக் கொண்டிருந்தான். அவன் இரவில் இருமிய சத்தம் ஏனையோரைக் குழப்பியதை உணர்ந்தான்; எனினும் மெதுவாக இரும அவனால் முடியவில்லை.

''நோயே, நீ ஏன் மனிதனை வருத்தி முடிக்கிறாய்?'' என்றேன். தொடர்ந்து ஆய்ந்தேன். நோய்க்குக் காரணமாகிய நோய்க்கிருமிகளும் இழுபட்டு, அவை கண்ணாடி மூலம் பெரிதாகக் காட்சி தந்தன. ஆனால் அவை நடுங்கிக்கொண்டிருந்தன. 'நவீன மருத்துவமூலம் நாம் இனம் கண்டு அழிபடும் நிலையிலுள்ளோம்' என அவற்றின் ஏக்கத்துடிப்பு காட்டிக் கொண்டிருந்தது.

---



களப்பலியான
முதல் பெண்புலி

**2ஆம் லெப். மாலதி**

( பேதுறு சகாயசீலி )
ஆட்காட்டிவெளி,
அடம்பன், மன்னார்.

''உங்களையும் அல்ல நான் தேடுவது'' என்றது என் குரல்.

இப்போதும் அந்த முன்னைய ஒலிக் கும்மாளம் கேட்டுக் கொண்டிருந்தது. அதே வெற்றிக் கனைப்பு! பின்னர் மௌன இடைவெளி. மீண்டும் அந்தக் கொடுமையின் பிடிக்குள்ளான துயர்களின் முனகலே கேட்டது.

என் இமைகள் மூடின: நெஞ்சம் திறந்தது. எம் பாழான சமூகம் தெரிந்தது.

பரம்பரை பரம்பரையாய் வந்த வாட்டங்கள்—வாழவிரும்பும் ஏக்கங்கள்—பொறாமைச் சுவாலைகள்—சொல் ஈட்டிகள்— பிரிவுகள்—பிளவுகள் தெரிந்தன.

இரத்த ஓட்டக் குறைவு தெரிந்தது. அதைத் தொடர்ந்துவரும் நோய்களும் தெரிந்தன!

சுற்றி இறுக்கும் ஒரு மலைப் பாம்பும் தெரிந்தது. உள்ளே எதிர்ப்பின் அசைவு தெரிந்தது; எனினும் இரத்தத்தைச் சொட்டவைக்கும் இறுக்கம் இன்னும் தெரிந்தது.

காரணம் என்ன என நெஞ்சம் குமுறியது!

''நான்தான்'' என்ற ஏளன விடை உடன் கிடைத்தது! இது அந்த ஏளனப் பதிலின் பெருங்குரலாக எழுந்தது.

''யார் நீ?'' என்றேன்.

''உங்களுள் வாழும் நான்.''

''யார்?''

''உங்கள் சொந்த உணர்வு .. உங்கள்... மனக் கிருமி!''

''என்ன?''

''ஆமாம், உங்கள் சா... தி... யம்!'' என எக்காளமிட்டது அது.

விடுபடப் போகிறோமா? இல்லையா .....?

நன்றி:
அதிர்ச்சிநோய் எமக்கல்ல!

---

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலிகள்
## மாலதி! நீ மூண்ட தீ!!

பூவென்றும் கொடியென்றும்
முன்னைப் புலவர்களின் உவமையெல்லாம்
பொய்யாகிப்போக
'குசினிக்குருவிகள்', 'படுக்கையறைப்பதுமைகள்' என்ற
பழைய பார்வை விழிகள் குருடாகிப்போக
கண்ணுக்கு மை,
நகத்துக்கு மருதோன்றி,
காலுக்குக் கொலுசு... என்ற
ஒப்பனைகளை உதறிவிட்டு
கைகளில் கருவிதூக்கிக் களமாடி நின்றவள்.
மண்ணுக்குள் விதையான மாவீரர் வரிசையிலே
பெண்ணுக்குள் இவளே முதலான பெருமாட்டி.

## யார் இந்தப் 'பிரம்மஞானி'?

கடந்தமாத 'வெளிச்சம்' இதழில் 'பிரம்மஞானி' எழுதிய 'கருத்துலகமும் வாழ்வியக்கமும்' என்ற கட்டுரையைப் படித்தேன். எளிமையான மொழி. சிக்கலற்ற வசனங்கள். கவர்ச்சிகரமான விதத்தில் பொருள் சொல்லும் திறன். இந்த அடிப்படை அமைப்புடன், பலரும் குழம்பிக்கொண்டிருந்த தத்துவார்த்த விடயத்தை வெகு இலகுவாகச் சொல்லியுள்ளார். அறிவியற் தத்துவக்கட்டுரைகள் இவ்விதம் எழுதப்படுமானால், விளங்கிக் கொள்ள ஏதுவாகும். பலராலும் படிக்கப்படும். விஷயங்கள் வெகு தீவிரத்துடன் மனதில் பதியும்.

'வெளிச்சம்' இரண்டாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழில், அவர் கருத்துலகம் எவ்வாறு மனித வாழ்வியக்கத்தை நிர்ணயிக்கும் சக்தியாகப் பரிணமிக்கிறது என்பதை தெளிவாகப் புலப்படுத்தியிருந்தார். இந்தக்கட்டுரையின் சாரம் எங்கிருந்து தொகுக்கப்பட்டது அல்லது மொழிபெயர்க்கப்பட்டதா? இல்லை; பிரம்மஞானியின் அறிவுச்சிரத்தையா?

சரி, இவ்விதம் சிறப்புடனும், கருத்தாழத்துடனும் எழுதும் இந்தப் பிரம்மஞானி யார்? இவர் எழுதிய சில கட்டுரைகளை அண்மையில் 'ஈழநாதம்' பத்திரிகையில் படிக்கக்கிடைத்தது. ஒவ்வொரு கட்டுரையிலும் தன் தனித்துவத்தை மிக அவதானத்துடன் வெளிப்படுத்தும் அழகை அவதானிக்கமுடிகிறது. இது இவரது கட்டுரைகளில் ஒரு ஈர்ப்பையும், ஆழ்ந்த கவனத்தையும் ஏற்படுத்துகின்றது. பிரம்மஞானி என்ற இந்தப் பெயரில் முன்னரும் வேறு எங்கோ சில விடயங்களைப்படித்த ஞாபகம்?

பிரம்மஞானி எழுதவேண்டும்; நிறைய நிறைய. புதிய கருத்துக்களை, தத்துவார்த்த சிக்கல்களை அவர் தெளிவாக்கவேண்டும்.

**சி. இலங்கேசன்**
*தபாற்கந்தோரடி,*
*தோவண்டை, பளை.*

# மனிதனைத் தேடும் மனிதன்

பிரம்மஞானி




ஆதி மனிதன், தனது உலகானுபவத்தை அர்த்தமுள்ள சப்தங்களாக வார்த்தைகளில் உருவகித்து, பேசும் ஆற்றல்பெற்று, சுயமாகச் சிந்திக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே அவனிடம் அந்தக் கேள்வி பிறந்தது.

கேள்விகளுக்கு எல்லாம் மூலக் கேள்வியாக, வாழ்வியக்கத்தின் அர்த்தத்தையே தொட்டுநிற்கும் கேள்வியாக, ஆதி மனிதன் தன்னை நோக்கி அந்த வினாவை எழுப்பினான்.

'நான் யார்?'

எல்லையற்ற பிரபஞ்சத்தின் எங்கோ ஒரு மூலையிலிருந்து திசைதெரியாது தவித்த மானிடத்தின் அவலக்குரலாக அந்தக்கேள்விஎழுந்தது.

அந்தக்கேள்வி பிறந்தகணத்திலிருந்து இன்றுவரை, ஒரு நீண்ட முடிவில்லாத சுயவிசாரணைத் தேடுதலாக மனிதன் தன்னைத்தானே தேடிக்கொண்டிருக்கிறான். அந்தத்தேடுதல் இன்னும் முடியவில்லை.

அன்றிலிருந்து இன்றுவரை, ஓயாது ஓடிக்கொண்டிருக்கும் காலநதி இந்தப் பூமியின் முகத்தையே மாற்றிவிட்டது. நாகரீகங்கள் தோன்றி, வளர்ந்து, சிதைந்து அவற்றின் புதைகுழியிலிருந்து ஒருபுதிய உலகம் பிறந்துவிட்டது. படிப்படியாக பௌதீகஉலகின் சூட்சும முடிச்சுகளை

மனிதன் அவிழ்த்துவிட்டான். என்றுமில்லாவாறு மனித அறிவு வளர்ந்தது. விண்ணுலக அண்டத்தின் விசாலம் தொட்டு, நுண்ணுலக அணுவின் மூலம்வரை, இயற்கையின் எண்ணிலாப் புதிர்களை எல்லாம் மனிதன் அறிந்துகொண்டான். ஆனால் மனிதன் தன்னைப்பற்றி இன்னும் அறிந்துகொள்ளவில்லை. மனிதன்யார் என்ற கேள்வியைப் பின்தொடரும் தேடுதல் ஒரு முடிவில்லாத தொடர் கதையாக இன்னும் தொடர்கிறது.

அன்றொருகாலம், கிரேக்கநாட்டில் ஒரு வயோதிப தத்துவஞானி இருந்தார். அவருக்குப் பைத்தியம்பிடித்துவிட்டதாக மக்கள் கருதினர். அந்த மனிதர், இரவு வேளையில், ஒருகையில் ஊன்றுகோலுடனும் மறுகையில் ஒருவிளக்குடனும் அதென்ஸ் நகர வீதிகளில் யாரையோ தேடி அலைந்துகொண்டிருந்தார். தனக்கு எதிரே வரும் மனிதர்களை வழிமறித்து, கைவிளக்கை உயர்த்திப்பிடித்து அவர்களது முகத்தை உன்னிப்பாக நோட்டமிடுவார். இப்படியாக தினமும், இரவில், விளக்கு வெளிச்சத்தில், மாறி மாறி மனித முகங்களை தரிசிப்பதில் அவரது காலம் கழிந்தது. இவரது தொல்லைதாங்காது ஒரு நாள் அந்த நகரவாசிகள் அவரிடம் சென்று ''யாரைத் தேடுகிறீர்கள்'' என்று கேட்டனர்.

''நான் ஒரு மனிதனைத் தேடிக்கொண்டிருக்கிறேன்'' என்று அந்தத் தத்துவஞானி பதில் சொன்னார்.

பொய்யான, போலியான மனிதர்கள் மத்தியில் ஒரு உண்மையான மனிதனை அந்தஞானி தேடிக்கொண்டிருந்தாராம்.

இப்படியாக மனிதனை மனிதன் தேடிய விசித்திரமான வரலாறு நீண்டகாலத்திற்கு முன்னரே தொடங்கிவிட்டது.

ஆதியிலிருந்தே மனிதன் ஒரு கனவு கண்டான். இந்தப் பூவுலக வாழ்வின் நிர்ப்பந்தங்களுக்கு அப்பால், நிச்சயமற்ற தன்மைகளுக்கு அப்பால், துன்பத்தின் அழுத்தத்திற்கு அப்பால், காலத்தின் எல்லைக்கு அப்பால், சாவின் நியதிக்கு அப்பால், இல்லாமை என்ற சூன்யத்திற்கு அப்பால், ஒரு நித்திய சீவியத்தை, பேரானந்த பரவசத்தில் சதாலயித்திருக்கும் சிரஞ்சீவியான வாழ்வைக் கனவு கண்டான். மனிதனின் இந்தக் கனவிலிருந்து ஒரு கருத்துலகம் பிறந்தது. அழியாத ஆன்மா என்றும், ஆவி உலகம் என்றும், அடுத்த பிறவி என்றும், சுவர்க்கம் என்றும், நரகம் என்றும், இந்தப் பூவுலகத்திற்கு அப்பால், நாம் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, மடியும் இந்த நிஜவுலகத்திற்கு அப்பால், நாம் தொட்டுணர்ந்து பட்டறிந்துகொள்ளும் இந்தப் புறவுலகத்திற்கு அப்பால், மனிதன் ஒரு பூடகமான உலகை கற்பிதம்செய்துகொண்டான். இந்தக் கற்பனாவாதம் இயற்கைக்குப் பதிலாக ஒரு இந்திரலோகத்தைப் படைத்தது. மனிதன் ஒரு அந்நிய உலகத்தின் அபூர்வப் பிறவியாக மாற்றப்பட்டான். இதனால் பூமியில் புதைந்துகிடந்த மனிதனின் பூர்வீக வேர் பிடுங்கி எறியப்பட்டது. மனிதனின் மனக்குகை இருளுக்குள், அடிமன பாதாளத்திற்குள், ஆதியும் அந்தமுமற்ற அழியாத ஆன்மா ஒன்று புகுந்துகொண்டது.

அந்த ஆன்மத்தின் இரகசியத்தை மனிதன் தேடத்தொடங்கினான். இதனால் புதிய கேள்விகள் பிறந்தன.

'நான் யார்?' என்ற மையக் கேள்வியுடன் 'நான் எங்கிருந்து வந்தேன்?', 'நான் எதற்காக இங்கு வந்தேன்?', 'நான் எங்கே போகிறேன்?', என்ற புதிய, புதிரான வினாக்களும் எழுப்பப்பட்டன.

இந்த வினாக்களும் அவற்றிற்கு அளிக்கப்பட்ட விளக்கங்களும், அதனால் எழுந்த

கருத்துருவப் பொய்மைகளும், உண்மையான மனிதனை இந்த உண்மையான உலகத்திலிருந்து அந்நியமாக்கியது. மனிதனுக்கும், மனிதஉலகத்திற்கும், மனித வாழ்விற்கும் விசித்திரமான வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டன.

இதன்படி, இந்தப் பூவுலகம் ஒரு மாயாலோகம். ஒருமானசீகத் தோற்றப்பாடு. எமக்குள்ளே இருந்துகொண்டு, எல்லாம் தெரிந்ததாக எண்ணிக்கொள்ளும் மனக்குரங்கு, பொய்களைக்கொண்டு உருவகிக்கும் ஒரு போலியான உலகம். சத்தியத்தின் இருப்பிடமாக இன்னொரு உலகம் இருக்கிறது. அந்த ஆன்மஉலகிலிருந்து நாம் இங்கு, வந்து, வந்து, வாழ்ந்துவிட்டுப்போகிறோம். விதிஎன்ற முடிவில்லாப் பெருங்கதையில் நாமெல்லாம் சிறு, சிறு நாடகப்பாத்திரங்கள். வந்து, வந்து, நடித்துவிட்டுப் போகிறோம். எம்மைச் சாவுதீண்டுவதில்லை. உடல்களை உடையாக அணிந்து, பின் உரிந்துவிட்டுச்செல்கிறோம். இந்தப்பூமி ஒரு தற்காலிக தங்குமடம். பாவங்களைச் சுமப்பதற்கும், ஆசைகளைத் தீர்ப்பதற்கும், கர்மவினை கழிப்பதற்கும் நாம் இங்கு வந்து தங்கிச்செல்கிறோம். பிறப்பு இறப்பு என்ற சூட்சுமச்சக்கரத்தில், முடிவில்லாத ஒரு சங்கிலித்தொடர்பில் பிணைபட்டு, இழுபட்டு, நசிபட்டு எமது வாழ்வு நகர்கிறது. இந்தப் பொய்யான பூவுலக மாயையிலிருந்து விடுபடும்வரை எமக்குவிடிவில்லை. இந்த உலகத்தைத்துறந்து, உறவுகளைத்துறந்து, உணர்வுகளைத் துறந்து, சாதாரண வாழ்வின் சகலவற்றையும் துறந்த பரிபூரண துறவறத்தில் விமோசனத்திற்கு வழிஇருக்கிறது. உள்ளே உள்ள உள்ளொளியின் தரிசனத்தில் அந்த மெய்ஞான விழிப்புணர்வில், 'நான்' என்ற பொய்ப்பொருள் செத்துவிட மெய்ப்பொருள் புலனாகும். அந்த ஞானோதயத்தில் விதியின் விலங்குகள் உடைந்துவிழும். பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு என்ற சங்கிலிப் பிணைப்பிலிருந்து விடுதலை கிட்டும்.

'நான் யார்?' என்ற தேடுதல் 'நான் ஒரு பொய்' என்ற கண்டுபிடிப்புடன் முடிவடைகிறது.

வேதகாலம். மணிபுரி என்ற நாட்டின் மன்னன், துறவறம் பூண்டு, அந்தக் குருஷேத்திரம் வருகிறான். மெய்ஞானம் பெற்ற அந்த முனிவனிடம் மண்டியிடுகிறான்.

''நான் மணிபுரிநாட்டின் மன்னன். எனது வயோதிபத்தில் வாழ்க்கையைத் துறந்துவிட்ட நான், மெய்ப்பொருளைக் கண்டுகொள்ள விரும்புகிறேன். நீங்கள் தான் எனக்கு ஞானவொளிகாட்டி, வழிகாட்டவேண்டும்'' எனக் கேட்டான்.

தியானத்திலிருந்து விழித்துக்கொண்ட முனிவர், மன்னனைப் பார்த்து, ''நான் செத்துவிட்டதும் என்னிடம் வா'' என்று சொல்லிவிட்டுக் கண்களை மூடிக்கொண்டார்.

ஒன்றுமேபுரியாது, குழப்பமடைந்தவனாக ஆச்சிரமத்திற்கு வெளியேவந்த மன்னன், முனிவனின் சீடனை அழைத்து, முனிவன் கூறிய வார்த்தைகளுக்கு அர்த்தம் கேட்டான்.

''நான் செத்துவிட்டதும் என்று முனிவர் தன்னைக் குறிப்பிடவில்லை. உனக்குள்ளே, உனது ஆசையின் வடிவமாக, உனது அகங்காரத்தின் இருப்பிடமாக இயங்கிக்கொண்டிருக்கும், உனது 'நான்' முதலில் இறக்க வேண்டும். உனது சுயத்தின் சாவுக்குப் பின்னரே தன்னிடம் வருமாறு குருநாதர் கூறியிருக்கிறார்'' என்று அந்தச்சீடன் அரசனுக்கு விளக்கம் கொடுத்தானாம்.

'நான்' என்றபொய்யை சாகடிப்பதற்கு முன்னரே அந்த அரசன் செத்துப் போனான்.

'நான்' என்பது பொய்என்றால், எனது பிரக்ஞையின் பிரமைஎன்றால், எனது மனவுலகம் சிருஷ்டிக்கும் மாயை என்றால், 'நான்' என்று எனக்குள்ளிருந்து சிந்திப்பவனாக, உணர்பவனாக, உணர்ச் சிப்படுபவனாக, ஆசைப்படுபவனாக, நானாக என்னை இயக்கிவரும் அந்தப் பிரகிருதி யார்?

''நான் என்பது ஒருஎண்ணம். எண்ணவோட்டத்தின் நெற்றிக்கண்ணாக அமையப்பெறும் ஒரு எண்ணம்; மனவுல கம் உள்வாங்கிக்கொள்ளும் கோடானு கோடி எண்ணப்படிமங்களின் மையப்படிம மாக 'நான்' என்ற சுயம் எழுகிறது,'' என்கிறார் ஒரு ஞானி.

அப்படியானால், நான் என்பது ஒரு மானசீகப் பொருளா? நினைவுகளின் நிழலாக, படிமங்களின் நடுவப்படிமமாக, எண்ணச் சிதைவுகளிலிருந்து உயிர்பெறும் ஒரு மானசீகப் பேய்த்தோற்றமாக மனித னின் சுயத்தை, அவனது ஆளுமையை சித்தரிக்க முடியுமா?

'நான்' என்பது எனது மனநிலைக்கு அப்பால், எனது உயிர்நிலை சார்ந்த சுயவுணர்வாகவும் இயங்குகிறது அல்லவா? எனது உயிரின் இருப்பிடமாக, பொருளுரு வம் பெற்றிருக்கும் உடற்கூறும் எனது சுயத்தின் திண்ணியமான பொருள்வடிவம் அல்லவா? உடலும் உயிருமாக, இரத்த மும் சதையுமாக, உணர்ச்சியின் பிண்ட மாகவும் 'நான்' இருப்புற்று இருக்கிறேன் அல்லவா?

'நான்' என்பது அகவுலகத்துப் பிசாசு அல்ல. அன்றித் தெய்வலோகத்து பதுமை யும் அல்ல.

மனிதன்என்பவன் இயற்கையின் குழந்தை. இயற்கை என்ற மாபெரும் கலைஞனால் படைக்கப்பட்ட ஒரு கலை வடிவம்; உயிர்வடிவம். இயற்கையின் கருவகத்துடன் மனிதனின் தொப்புள் கொடி பின்னிப்பிணைந்து கிடக்கிறது. ஒருபுறம், இயற்கையின் சிருஷ்டியாகவும், இயற்கையின் மடியில் வேர் பதித்து நிற்ப வனாகவும், மறுபுறம் சமூகப்பிறவியாக வும், சமூக வாழ்வியக்கத்தில் உருவாக்கம் பெறுபவனாகவும், இருமுகப் பரிமாணத் தில் மனிதனின்வாழ்வு அமைகிறது.

மனிதன் உணர்ச்சிமயமானவன். உணர்ச்சிகளின்பிண்டமாக இயற்கை மனிதனைப் படைத்திருக்கிறது. இயல் பூக்கங்களாக, இயல்புணர்ச்சிகளாக (*INSTINCTS*) அவை மனிதனை ஆட்டிப் படைக்கின்றன.

இயற்கை மனிதனைப்படைத்தது மட்டுமன்றி, மனிதன் தன்னைத்தானே படைத்துக்கொள்ளவும், பாதுகாத்துக் கொள்ளவும். தனது இனத்தை விருத்தி செய்துகொள்ளவும் நிர்ப்பந்திக்கிறது. இந்த நிர்ப்பந்த சக்தியாக, உந்துதலாக, இயல் புணர்ச்சிகள் மனிதனை ஆட்கொள்கின்றன.

இந்த இயல்புணர்ச்சிகளின் மையமாக பாலுணர்ச்சி அமைகிறது. ஒரு ஜீவசக்தி யாக சகல ஜீவராசிகளையும் அது இயங்க வைக்கிறது. சகல உயிர்களையும் மீளாக்கம் செய்கிறது. அது என்னையும் உன்னையும் பற்றிக்கொள்கிறது. அதன் ஈர்ப்புச் சக்தியி லிருந்து நீயும் நானும் தப்பிவிடமுடியாது. படைத்தலின் தவிர்க்கமுடியாத நியதியாக அது எம்மைப்பணியவைக்கிறது. இன்ப நுகர்ச்சியின் பரவசத்தைக்காட்டி அது எம்மை ஆகர்ஷித்துக்கொள்கிறது.

பாலெழுச்சியாக தோற்றப்பாடு கொள்ளும் இந்த ஜீவசக்தியை, லிபிடோ (*LIBIDO*) என்றும், உயிரியக்கசக்தி

(*LIFE FORCE*) என்றும், காதல் தெய்வம் (**EROS**) என்றும் சிக்மண்ட் பிராய்ட் விபரிக்க விளைகிறார்.

இந்தப்பாலெழுச்சியின் திருவிளை யாடல்களை மையக்கருவாகக்கொண்டே பிராய்டின் உளப்பகுப்பியல் மனிதனையும், மனிதவாழ்வையும் விசாரணைசெய் கிறது.

மனிதன் விழிப்புநிலையில் இருக்கும் பொழுது இயங்கிக்கொண்டிருக்கும் சாதாரண பிரக்ஞைக்கு அப்பால், நனவு அற்றநிலையில், ஒரு மனவுலகம் உண்டு. இது மனிதனின் ஆழ் மனம்; நனவிலி மனம். இதுவே மனித மனஇயக்கத்திற்கு ஆதாரமாக இருக்கிறது; மூலமாக இருக் கிறது. இந்த நனவிலிமனம் என்ற கோட் பாட்டை அடித்தளமாகக்கொண்டே பிராய்டின் உளவியல் தத்துவம் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது.

இந்த நனவிலிமனம் எப்படியானது? எப்படி இயங்குகிறது? மனிதனின் ஆழ் மனப் பாதாளத்திற்குள், செத்துப்போன நினைவுகளின் கல்லறைகளுக்கு அப்பால், என்ன ஒளிந்து கிடக்கிறது?

மனதின் ஆழத்தில், நனவிலி மனதில் புனிதமான பொக்கிஷம் எதுவும் இருக்க வில்லை. மனிதன் கனவு கண்ட அழியாத ஆன்மாவோ, அன்றி அடுத்த உலகத்து அதிசயப் பொருட்களோ இருக்கவில்லை. பிராய்டின் மனப்புதைபொருள் ஆராய்ச்சி, தெய்வலோகத்து புதையல்கள் எதையும் தோண்டி எடுக்கவில்லை. அவரது உளப் பகுப்பியல் கண்டுபிடிப்பில், அடிமனதின் ஆழத்தில் ஒரு எரிமலை இருந்தது. உணர்ச் சிகளின் நெருப்பலைகளாக அது எரிந்து கொண்டிருந்தது. அடக்கப்பட்ட ஆசை களின் அக்கினி நாக்குகள் நர்த்தனமாட அது குமுறிக்கொண்டிருந்தது. பிராய்டின் நனவிலி மனம் கொதிக்கும் உணர்ச்சிகளின் கொப்பறை.

நனவு மனமானது மனித பண்பாட்டு உலகத்தால் வனையப்படுகிறது. பண்பாட் டுக் கருத்துலகம் வரித்துவிடும் நியமங்களை யும் கட்டுப்பாடுகளையும் உள்வாங்கி உருவாக்கம்பெறுகிறது. தனிமனிதனின் சமூகப் பிரக்ஞையாக செயற்படுகிறது. இந்த நனவுமனமானது அடிமனதிலிருந்து ஆசைகளாக, அபிலாசைகளாக, உந்துதல் களாக மேலெழும் இயல்புணர்ச்சிகளை தணிக்கைசெய்து ஒடுக்கிவிடுகிறது. ஒடுக்கப் பட்ட உணர்வுகளும், ஆசைகளும் நனவிலி மனவுலகில் தஞ்சம் பெறுகிறது. அங்கு அவை, தணிந்து அணைந்து போவதில்லை. மாறாக, சீற்றம்கொண்ட பாம்புகளாக அவை சீறி எழுகின்றன. எப்படியாவது, எந்த வழியிலாவது, எந்த வடிவத்திலாவது அடிமனப் புற்றிலிருந்து வெளியேற அவை சதா விளைந்து கொண்டிருக்கின்றன.

கனவுகளும் நனவிலி மனதின் ஒரு வெளிப்பாடு. புதிரான படிமங்களில் புனை கதைகள் பின்னி, குறியீட்டுச் சித்திரங் களாக மனத்திரையில் கட்டவிழும் கனவுக் காட்சிகளில் அடிமன ஆசைகள் ஒளிந்து கிடக்கின்றன. நனவுலகில், நிஜவுலகில் நிறைவுகாணமுடியாத ஆசைகள் கனவுலகில் நிறைவுகண்டுவிடுகின்றன. கனவுலகத்தின் கதவுகளைத் திறந்துகொண்டே நனவிலி மனவுலகில் தான் நுழைய முடிந்ததாகப் பிராய்ட் கூறுகிறார்.

உணர்ச்சிகள் ஆசைகளாக அடிமன திலிருந்து வெளியேற விளைவதும், அவை நனவு மனதில் மறுக்கப்படுவதும், மறுக்கப் பட்ட ஆசைகள் முகமூடிகள் அணிந்து, வேஷங்கள் போட்டு வேறுவழிகளில் வெளிப்பாடு காண விளைவதும், அதனால்

எழும் நெருக்குவாரங்களும் முரண்பாடுகளும் உளச் சிக்கல்களாகவும், மனக் கோளாறுகளாகவும், ஆளுமைச் சிதைவுகளாகவும் வீபரீத தோற்றப்பாடுகளை எடுப்பதுமாக பாலெழுச்சி என்ற 'காதல் தெய்வத்தின்' திருவிளையாடல்களை பிராய்டிய மனப்பகுப்பியல் வீபரீத்துக் கூறுகிறது. இந்த உளவியல் தத்துவம் மனித ஆழ்மனதின் அசைவியக்கத்துடன் நின்றுவிடாது மனிதனின் கலை, பண்பாட்டு உலகத்திற்கும், மனித நாகரீகத்தின் தோற்றத்திற்கும் விசித்திரமான விளக்கங்களையும் கொடுக்க முனைகிறது. நனவிலி மனதில் முடங்கிக் கிடக்கும் ஆசைகள் கனவுலகத்தை சிருஷ்டித்து வெளிப்பாடு காண விளைவதுபோல, நனவு மனமும் விழிப்பு நிலையில், கற்பனா உலகில் பிரவேசிக்கிறது. கற்பனை வடிவில் மனிதன் விழித்துக்கொண்டு காணும் கனவுகள், புராணங்களாக, காவியங்களாக, இலக்கியங்களாக கலைவடிவம் பெறுவதாகவும், மனிதனின் அடக்கப்பட்ட பாலுணர்வு ஆசைகள் இன்பநுகர்ச்சி என்ற அதன் இயல்பான இலக்கிலிருந்து வீடுபட்டு, கலா சிருஷ்டிப்பு என்ற உன்னத வெளிப்பாடாக உயர்நிலை மாற்றம் (*Sublimation*) பெறுவதாகவும் பிராய்டிஸம் மிகவும் அபத்தமான விளக்கங்களையும் கொடுக்கிறது.

எல்லாமே அது, எல்லாவற்றிலும் அது, எல்லாவற்றையும் அசைப்பது அது, அதுவின்றி எதுவுமில்லை என்ற வகையில் பிராய்டின் உளப்பகுப்பியல் பாலுணர்ச்சிக்கு அலாதியான முக்கியத்துவம் கொடுத்து, அதன் மையத்திலிருந்தே மனித மனம், மனித வாழ்வு, மனித பண்பாடு என சகலவற்றிற்கும் விளக்கமும் அளிக்கிறது. இந்த உளவியல் தத்துவம் மனிதனை ஆசையின் பிராணியாக, இன்பத்தின் பித்தனாக சித்தரிக்க முனைகிறது.

மனிதன் இயற்கையின் படைப்பு என்பதால் மனித உயிர்வாழ்வு இயற்கையின் நிர்ப்பந்த சக்திகளுக்கு உட்பட்டிருப்பதால் இயல்புணர்ச்சியாக எழும் பாலெழுச்சியின் அழுத்தத்தையும் வீச்சையும், மனித மனதிலும் மனித உறவுகளிலும் அது செலுத்தும் தாக்கத்தையும் நாம் குறைவாக மதிப்பிட முடியாது. ஆயினும் பாலுணர்ச்சி உந்துதலை மனிதனின் சாரமாக கற்பித்து, மனித வாழ்விற்கும், மனித பண்பாட்டு வரலாற்றிற்கும் ஒருமுகப் பரிமாணத்தில் விளக்கம் அளித்துவிட முடியாது.

பிராய்ட், உணர்ச்சிமயமான மனிதனைக் கண்டார். மனிதன் இயற்கையோடு ஒன்றியிருப்பதை பார்த்தார். மனிதனின் பரிணாம வேர் இயற்கையில் புதைந்து கிடப்பதை அவதானித்தார். ஆயினும் அந்தக் கண்டுபிடிப்பை, நம்பமுடியாத கற்பனாவாத எல்லைகள்வரை விரிவுபடுத்தி, மிகைப்படுத்திவிட்டார். பிராய்டின் தேடுதல், மனிதனின் முழுமையான முகத்தைக் காட்டவில்லை. மனிதனை ஒரு சமூகப் பிறவியாக, சமூக உறவுகளால் பிணைக்கப்பட்டு, சமூக வாழ்வியக்கத்தால் உருவாக்கப்படுபவனாக அவர்பார்க்கவில்லை.

(இன்னும் வரும்)


---

# வெளிச்சம்

**அடுத்த இதழ் மாவீரர்நாள் சிறப்பிதழாக வெளிவருகின்றது.**

---

விடுதலையின் ஒளியாக விளங்கிடும்
'வெளிச்சம்'
வளர எமது வாழ்த்துக்கள்



ஐங்கரன் அரிசி ஆலை

இணுவில் தெற்கு
இணுவில்.

பிளாஸ்ரிக் பொருட்கள்
செரமிக் பொருட்கள்
றேடியோ, மணிக்கூடு - மற்றும்
பயணத்துக்கு இலகுவான பைகள்
அன்பளிப்புப் பொருட்கள்
என்பவற்றின் மனதுக்கு இசைவான கொள்வனவுக்கு

## கோல்டன் ரி. வி. ரேட் சென்ரர்

2A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

*பலசரக்குப் பொருள்களின்
தேவைகளுக்குத் தேடிவருபவர்கள்
மாகோ களஞ்சியத்திற்கே!*

## மாகோ களஞ்சியம்

03, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

எல்லாவகை டீசல் பம்புகளும்
இன்ஜெக்ரர்களும்
திருத்துவதும், சேவிஸ் செய்வதும்.
உதிரிப்பாகங்களையும் விநியோகம் செய்பவர்கள்.

**இராசா டீசல் என்ஜினியர்ஸ்**
180, பருத்தித்துறை வீதி,
குருநாதர் கோவிலடி
யாழ்ப்பாணம்.

---

நீங்கள் விரும்பும் நவநாகரீகமான
புடைவைத் தினுசுகளுக்கும், கூறைச்சேலைவகைகளுக்கும்
கைத்தறிப் பிடவைகளுக்கும்
புகழ்பெற்ற ஸ்தாபனம்

**சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
172, (84) கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தரமான இமிரேசன் கோல்ட் கவரிங்நகைகள்
மணப்பெண்களின் சோடனை நகைகள்
லேஸ், நூல் வகைகள்
சிறுவர் விளையாட்டுப் பொருள்கள்
மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு
அழகுசாதனப் பொருட்களை
நிதான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

ஜெயா பென்ஸி ஹவுஸ்
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

கிளை:

ஜெயா பென்ஸி ஹவுஸ்
160, நவீன சந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்.

இது மழைக்காலம்
இனி ஊரெல்லாம் விதைப்பு நடக்கும்
எங்கும் பசுமை படரும்
வேளாண்மை செய்வோரின் மேலான கவனம்
இனி எப்பொழுதும்

விவசாயத்துக்கான இரசாயன மருந்துகள்
தெளிகருவிகள்
உரவகைகள்

என்பவற்றில்தான். இவற்றுக்கு எப்பொழுதும்

**லங்கெம்**

**ஏக விநியோகத்தர்கள்**
**219, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.**

---

இலக்கியம் ஒரு மனிதனை ஆற்றுப்படுத்துகிறது.
மேலும் அவனை நெறிப்படுத்துகிறது.
வாழ்வின் மீது தீவிரத்தையும், தேடலையும் ஏற்படுத்துகிறது.
இலக்கியம் வளர்ந்து செல்லச் செல்ல
மனித வரலாற்றின் பரிமாணங்களைக் காணமுடிகிறது.

ஈழத்திலும் கலை, இலக்கியம் வளர வாழ்த்துகின்றோம்.

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**
**166, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

யாழ்ப்பாணத்தில் ஒரு கவர்ச்சிமிக்க விற்பனை நிலையம்
**ஸ்ரீராம்**

சில்வர் பொருட்கள்
பிளாஸ்ரிக் வகைகள்
சகலவகையான பயணப்பைகள்
அழகு சாதனங்கள்
சிறுவருக்கான பாடசாலை / விளையாட்டுப்பொருட்கள்
எல்லாவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
வழங்குகிறது.

**ஸ்ரீராம் விற்பனை நிலையம்**
**326, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

உங்களின் சகல தேவைகளையும்
நிறைவேற்றும் நிறுவனம்.

## தமிழருவி
பல்பொருள் அங்காடி

விடுதலைப்போராட்ட நூல்கள்
தாயக விடுதலைப்பாடல் ஒலிநாடாக்கள்
இலக்கிய நூல்கள்
பாடசாலை மற்றும் அலுவலக உபகரணங்கள்
அழகுசாதனப்பொருட்கள் என்று
உங்களின் தேவைகளை
தமிழருவி நிறைவேற்றுகிறது.

# தமிழருவி
71, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.